மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: October, 1910.	No-10.
புத்தகம் - ௧௨.	சென்னப்பட்டணம்: அக்டோபர்மீ 1910.	லக்கம்-10.

காலங்கழித்தல்.

நாமனைவரும் காலம் விரைவாய்க் கழிந்து விடுகிறதென்றும், காலம் வெகு குறைவாயிருக்கிறதென்றும் சிந்திக்கிறோம்; ஆனால் இருக்கிறகாலத்தில் இன்னது செய்வதென்று தெரியாமல் வீண்பொழுது போக்குகிறோம். நம்முடைய வாழ் நாட்களெல்லாம் ஒன்றும் செய்யாமலிருத்தலிலேயோ, பிரயோஜன மற்றவைகளைச் செய்வதிலேயோ, செய்யவேண்டுவனவற்றைச் செய்யாமலிருத்தலிலேயோ, கழிந்துவிடுகின்றன. வாழ் நாட்களெல்லாம் சிலவென்று சொல்லுகிறோம்; ஆனால் காலம் முடிகிறவரையில் பிழைத்திருக்கப் போகிறவர்கள் போல் நடக்கிறோம். நம்முடைய வார்த்தையும் செய்கையும் ஒன்றுக்கொன்று என்ன பேதப்பட்டிருக்கின்றன.

நாம்வாழ்நாட்கள் கொஞ்சமென்று வியாகூலித்தாலும், அவ்வாழ்நாட்களிலுள்ள ஒவ்வொரு பாகமும் வெகுசீக்கிரமாய் முடிவதற்காக விரும்புகிறோம். திரண்ட செல்வத்திற்குரிய இளைஞன் வெகுசீக்கிரமாக வயதிற்கு வந்துவிடவேண்டுமென்று விரும்புகிறான். வயதிற்கு வந்ததும், வியாபாரம் முதலிய தன் வேலைகள் வெகு துரிதமாக நடந்து விடவேண்டுமென்றும், பொருள் ஏராளமாகச் சேர்த்து விடவேண்டுமென்றும், பட்டங்கள் தனக்குக்கிடைத்து வேலைதீர்ந்து சுகமாக வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் ஆசைப்படுகிறான். என்றாலென்ன, வாழ் நாள் முழுதும் குறைவென்று எல்லாரும் சொன்னபோதிலும், அதன் அநேக பாகங்கள் மிகுந்த நாட்கள் உள்ளனவாயும், எப்போது ஒழியுமோ வென எண்ணத்தக்கனவாயும் இருக்கின்றன; அதாவது நம்முடைய வாழ் நாட்கள் பலவாயிருக்கவேண்டும்; ஆனாலும், அதிலுள்ள பாகங்களில் நாட்கள் சிலவாயிருக்கவேண்டும் என்பது நம்முடைய எண்ணமென்று ஏற்படுகிறதல்லவா? வட்டிக்குப்பணம் கொடுக்கும் மார்வாடிநாளைமுதல்வட்டிவாங்குகிற நாள்வரையிலும் உள்ளகாலம் நொடிநேரத்திற்குள் கழிந்துவிடாதாவென்று எண்ணுகிறான். புதுமணம்புரிந்த மணவாளனுக்குத்தன் மனைவியை மறுதரம் காணும் வரையிலும் உள்ள ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்

வொருயுகமாகத்தோன்றும். ஆகவே, காலம் வெகு விரைவாய்க் கழிந்து கொண்டுவந்தாலும், சில சில சமயங்களில் இன்னும் சீக்கிரமாக நாட்கள் கழியாவாவென்று நினைக்கிறோம். நீரற்றவனாந்தரங்களும், மணல் வெளிகளும் நிறைந்த ஓர் தேசத்தினூடே பிரயாணம் செய்பவன், அவ்வனாந்தரங்களையெல்லாம் விரைவில் கடந்துவிட்டு, நீர்த்துறையுள்ள வோரிடத்தில்களிப்புடன் இளைப்பாறிச் சற்றுநேரம் தங்கியிருக்குமாறு போலத், துன்பங்களும் மனோ வியாகூலங்களும் நிறைந்த வாழ்வையுற்றிருக்கின்ற நாம், அத்துன்பங்கள் நிறைந்த காலங்கள் விரைவாகக்கழிந்து விடவேண்டுமென்றும், ஒவ்வோர் வேளையில் இன்பம் லபிக்கும்படியான காலங்கள் விரைவாகக்கழியாமல் இருக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம். இவ்விதமாகத் துன்பங்களினிடையே லபிக்கும்படியான இன்பம் எப்படியிருக்கிறதென்றால், தாபத்தினால் வருந்தி, அதைத்தணிக்கும் பொருட்டாக ஓர் கிணற்றிலிறங்கினானொருவன், ஆங்கோர் முதலையைக்கண்டு வெருண்டு, கரையின் மீதேற, அச்சமயத்தில் ஓர் புலியவ்விடத்து வர யதைக்கண்டு பயந்து அருகிருந்த ஓர் மரத்தின் கிளையைப்பற்ற, அக்கிளையையப்போது ஒருவன் வெட்டிக்கொண்டிருக்கத்தியங்கி, அவன் அண்ணாந்து பார்க்கும்போது, மரத்தின்மேலிருந்த ஒரு தேன் கூண்டினின்றும் இனிய தேன் அவன் நாவில் சொட்டினால் அவனுக்கு என்ன சுகமோ அதை யொத்திருக்கின்றது.

இன்னது செய்வதென்று தெரியாமல் வாணாளை வீண்கழித்து வருபவர் அநேகர். அவர்கள் தங்கள் காலத்தைக் கழிப்பதற்குப் பின்கூறும் வழிகள் உபயோகமா யிருக்குமென்கிற கருத்துடன் அவைகளைக் குறித்துச் சிறிது சொல்லுவோம்.

முதலாவது, நற்செயல்களைச் செய்வதும், பேரின்ப சாதனங்களைச் சிந்திப்பதும், இன்சொற்களைச் சொல்லுவதும், ஆகிய இத்யாதி புனித விஷயங்களில் உத்தியோகவேலை நேரம்போய் மிகுந்த காலத்தைக் கழித்தல் உசிதமாகும். கல்வி யறிவற்றவர்கட்குப் புத்தி புகட்டுவதும், அற்றா ரழிபசி தீர்த்தலும், துன்பமுற்றார்க்கு இன்சொல் கூறி யவர் துயரை யாற்றுவதும், நம்முடைய வாணாளில் ஒவ்வொருநாளும், ஒவ்வொரு நிமிஷமும் நாம் செய்யவேண்டியதும் செய்யக்கூடியதுமான வேலைகள். இத்தகைய புண்ணிய செயல்களைச் செய்வதினால் நம்முடைய மனதிற்குக் களிப்பும் ஆனந்தமும் உண்டாகும்.

அஃதன்றியும், வேலையொழிந்து பேசுவதற்கும் நண்பரில்லாமல், தனிமையாயிருக்கும் வேளைகளில் நாம் செய்யத்தக்க காரியம் எதுவெனில், சகலலோக காரணராயும், ஜகத்பிரசன்னராயும், அனாதரக்ஷகராயும், தொண்டருள்ளத் தொடுக்கமான இறைவனையும் உள்ள அனாதியங் கடவுளாகிய சாக்ஷாத் பரப்பிரம்ஹத்தைத் தியானித்துக் கொண்டும், கருணாநிதியாகிய எல்லாம் செய்யவல்ல இறைவனது திவ்ய கல்யாண குணங்களைச் சிந்தித்துக் கொண்டு மிருப்பதேயாம். இத்தகை மகா புருஷனுக்கு எத்தகைய தீங்கு நேரிடினும் மனக்கவலை யுண்டாவதற்கு எதுவில்லையன்றோ? லோகவியாபாரங்களை முடித்துக்கொண்டு தனிமையா யிருக்கும்போது தன் பிழைகளையெல்லாம் பெற்று வளர்த்த தாயினிடம் சொல்லிக் கொள்வதுபோல் பகவானிடம் சொல்லிக்கொண்டும், அவனது. திவ்யகாருண்யச் செயல்களை நினை

ந்துகொண்டுமிருப்பது எவ்வளவு ஆனந்தமென்பது அனுபவத்தில் தெரியும்.

மேற்கூறிய வழிகள் காலங் கழிப்பதற்குச் சாதனங்களா யிருப்பதன்றியும், மறுமைக்கும் பிரயோஜனப் படக்கூடியவைகளா யிருக்கின்றன.

"அற்றா ரழி பசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"
"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்."

வேலையொழிந்த நேரத்தைக் கழிப்பதற்கு வேறோர் வழி யெதுவென்றால்; பிரயோஜனப் படக்கூடியதும், தீமையற்றதுமான விளையாட்டுகள் விளையாடுவதும், தகுந்த நண்பனிடம் வார்த்தையாடுவதும், கற்றோர்கூடிய நற்சபையில் இருப்பதும், முதலியன, விளையாட்டுகளென்றால் காலமெல்லாம் விளையாடிக்கொண் டிருப்பதன்று; சூது, சொக்கட்டான் முதலியன ஆடுவது மன்று. நண்பனிடம் வார்த்தையாடுவது என்னுமிடத்து, நண்பன் தக்க நண்பனா யிருக்கவேண்டும், வார்த்தைகளும் நல்ல விஷயங்களைக் குறித்தே யிருக்கவேண்டும். தகுந்த நண்பனிடம் நமது குறைகளைக் குறித்தும், செயல்களைக் குறித்தும் சொல்லக் கேட்டுக்கொண்டும், யாதோர் விஷயத்தைக் குறித்துச் சம்பாஷித்துக் கொண்டும் இருப்பதைவிட மனதிற்கினியது வேறொன்றுமில்லை. மாதர்கள் பூந்தோட்டத்தை ஏற்படுத்தி அதைச்செவ்வனே பார்த்துவரலாம்.

சங்கீதம், சித்திரமெழுதல் முதலிய வற்றில் வல்லவர்க்குப்பொழுது போக்குவதற்கு அவையே சாதனங்களாயிருக்கின்றன. இவற்றில் வல்லவர்க்கு ஐம்புலன்களோடு மற்றோர் புலன் சேர்ந்தாற்போலிருக்கும். சிறந்த பாடல்களைப் பாடும்போதாவது, சிறந்த படங்களை வரையும்போதாவது, இவ்வுலகத் துன்பங்களையெல்லாம் மறந்து, மனக்கவலைகளெல்லாம் ஒழிந்து பேரின்பானு பவம்போல் மனக்களிப்புண்டாகுமென்கிறதற் கையமில்லை.

மேற்கூறிய வழிகளெல்லாவற்றிலும் சிறந்தது பெரியோர் எழுதியுள்ள புத்தகங்களை வாசிப்பதும் வாசிக்கக்கேட்பதுமாகும். "முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம்." இவ்விஷயத்தைக்குறித்துச் சொல்லப்புகின் பெருகுமாதலின் அடுத்த பத்திரிகையில் எழுதுவோம்.

சர்வஜித்.

30-வது அத்தியாயம்.

இரண்டு நாட்கள் சென்றன; அமராபுரியிலிருந்து ஹைகோர்ட் ஜட்ஜுகள் தங்கள் பரிவாரத்துடன் அனந்தகிரி வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் வந்த செய்தி ஸர்வஜித்துக்கு பின் வருமாறு தெரியவந்தது. ஸர்வஜித்தோடு ஒருவரும் பேசாதபடி அவனது அறைகார்க்கப்பட்டு வந்த தென்று சொன்னோம். ஜட்ஜிகள் அனந்தகிரிக்கு வந்த சாயந்தரம் கோபாலன் ஸர்வஜித்தைக் கார்க்க நியமிக்கப்பட்ட காவலனை உபசரிக்கிற பாவனையாய் அவனுக்கு அபரிமிதமான மதுவைக் கொடுத்துவிட்டான். அவனும் தூக்கமேலீட்டால் கோபாலனைப் பார்த்து, "ஐயா, எனக்குத் தூக்கம் வருகிறது ; நான் தூங்கி எழுந்திருக்கும் வரையில் என் உடுப்புகளை யணிந்து கொண்டு என் அலுவலை தாங்கள் பார்க்கவேண்டும்," என்று பிரார்த்திக்க கோபாலனும் அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டான். மற்றவன் உடைகளைக் கழற்றி விட்டுத் தூங்கிவிடவே, கோபாலன் அவைகளை மாட்டிக்கொண்டு ஸர்வஜித்தினறையிற் சென்று ஜட்ஜிகள் வந்திருக்குஞ் செய்தியை தெரிவித்ததுடன், தான் நமது கதாநாயகனது நன்மையைக் கருதி காவலனுக்கு மதுவைக்கொடுத்து தான் அவனுடைய உடைகளை மாட்டி அவனுடைய அலுவலைப் பார்த்துவந்த வரலாற்றையுங் கூற, ஸர்வஜித் மறுமொழியாக தான் தப்பியோடுவதற்கு கோபாலன் இவ்வேற்பாடுகளைச் செய்திருக்கும் பக்ஷத்தில் தான் அதற்கிசைய இஷ்டமில்லாமலிருப்பதாகச் சொன்னான். இதைக்கேட்ட கோபாலன் தான் அந்த நோக்கத்தைக்கொண்டு வரவில்லை யென்றும், ஆனால் விசாரணைக்குமுன் சிமாட்டி லீலாவதி ஸர்வஜித்தைப் பார்க்க விரும்பியதாகச் சொன்னதால் அவளது விருப்பத்தை நிறைவேற்ற இவ்வேற்பாடுகளைச் செயததாகவும், அவள் ஸர்வஜித்தை யெதிர் பார்த்துக் கொண்டு கோட்டையிலுள்ள சிறுகோயிலில் கார்த்துக் கொண்டிருப்பதாகவுஞ் சொன்னான். இதைக்கேட்டவுடன் ஸர்வஜித் குதித்துக்கொண்டெழுந்து, "அப்படியானால் இதோ புறப்பட்டு விட்டேன்," என்றான். கோபாலன் தான் அங்கு கார்த்துக்கொண்டு நிற்கவேண்டியது அவசியமாதலால் சேஷியம்மாள் ஸர்வஜித்தை லீலாவதியிருக்குமிடத்திற்குக் கூட்டிக்கொண்டு போவாள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே சேஷியும் வந்தாள்.

வந்தவள் காலதாமதஞ்செய்யாமல் ஸர்வஜித்தை தன் பின்னோடுவரும்படி சொல்லி அவனைக் கூட்டிக்கொண்டு பலமச்சுப்படிகள் தாண்டி ஒரு சிறு கோயிலில் புகுந்தாள். அவ்விடத்தில் ஒரு சிறு விளக்கு மெத்தவும் மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. சேஷி ஸர்வஜித்தைப் பார்த்து "அதோ விளக்கின் சமீபத்திலிருக்கிற தூணண்டை போ. நான் இந்த வாசற்படியிலேயே நின்றுகொண்டு யாராகிலும் வந்தால் தெரிவிக்கிறேன்" என்றாள்.

ஸர்வஜித் உள்ளேசெல்ல தூணில் சாய்ந்திருந்த லீலாவதியின் உருவத்தைக் கண்டான். சமீபத்தில் சென்று அவளெதிரே நிற்க அவள் பேசவில்லை ; முகத்தைப்பார்த்தான் ; மெத்தவும் வெளுத்திருந்தது ; அவள் கையைப்பிடிக்க அது சில்லென்றிருந்தது ; உடனே அச்சங்கொண்டு ஸர்வஜித், "லீலாவதி, "லீலாவதி" என்று கூப்பிட்டான். அவள் தூக்கத்தினின் றும் விழித்துக்கொண்டவள் போல், "ஆ, ஸர்வஜித்தா ?" என்று டார்த்தாள். ஆம், ஸர்வஜித்தே. ஆனால் உனது பரிதாபநிலையைப் பார்க்க எனக்கு மனஞ் சகிக்க வில்லையே. ஒருக்கால் மற்றவர்களைப்போல் நீயும் நான் பாதகத் தொழில் செய்தேனென்றெண்ணி இப்படி உருகுகிறாயோ?" என, லீலாவதி உடனே, "ஸர்வஜித், ஒருபொழுதும் அப்படி நினையாதே.நான்ஒருபோதும் உன்னை அப்படி நினைக்கவேயில்லை. எல்லோரிடத்திலும் நீ குற்றவாளி யல்ல

வென்றே தான் சொல்லி வந்திருக்கிறேன். அப்படிக் குற்றவாளியல்லாத உன் தலையில் இப் பெரும்பழி சுமந்திருக்கிறதே, நாளைய தினம் விசாரணை யாயிற்றே, எப்படி முடியுமோ என்றவிசாரத்தால் உன்னைப்பார்க்கவும், மற்றவர்கள் எப்படி நினைத்தாலும் சொன்னாலும் நீ மாசற்றவனென்று உனக்கு நேரே சொல்வதற்கும், மஹாப்பிரயாசத்துடன் உன்னை இங்கு வரவழைத்தேன்" என்றாள்.

ஸர்வஜித் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, "லீலாவதி, இவ்வார்த்தைகளைக் கேட்டு என் மனமடைகிற சந்தோஷத்தை என்னால் எடுத்துரைக்க முடியவில்லை. விசாரணையின் முடிவு எப்படியிருந்தாலு மிருக்கட்டும். என்னைத்தூக்குப்போடும்படி தீர்ப்பு செய்தாலும் செய்யட்டும். நீ என்னை நிரபராதியென்று நினைப்பதொன்றே போதும். இன்னொரு விஷயத்தை மாத்திரம் தெளியத் தெரிவிக்கவேணும். நீயேன் பிரபு அநங்கர் மூலமாய் அக்கடிதத்தை யனுப்பினாய் ?" என்று கேட்க, அவள், என் தமையன் ஸுரேந்திரன் காணாமற்போன தினத்தில் என் தகப்பனார் என்னிடம் வந்து பல வார்த்தைகளைப் பேசிக்கொண் டிருக்கையில், என்னை யினி ஒரு விஷயத்திலும் கட்டாயப் படுத்துவ தில்லையென்றும், என்னுடைய சம்மதமின்றி என்னை பிரபு அநங்கருக்கு விவாகஞ்செய்து கொடுப்பதில்லையென்றுஞ் சொன்னார். மறுநாளும் என்னிடம் வந்து பிரபு அநங்கரோடு பேசிக்கொண்டிருந்ததாகவும், நான் சம்மதித்தாலன்றி அவர் கல்யாணத்தை நடத்த கட்டாயப்படுத்த வில்லையென்று ஒப்புக்கொண்டதாயும், ஆகையால் நான் அவருக்கு நேரே என திஷ்டத்தைத் தெரியப்படுத்த என்னைக் கூட்டிக்கொண்டு போக வந்திருப்பதாகவும் சொன்னார். நானும் எனக்குச் சம்மதமில்லையென்று சொல்லத் துணிந்தே அவரிடஞ்சென்றேன். ஆனால் என் தகப்பன் எங்களைவிட்டு வெளியே சென்றவுடன் பிரபு அநங்கர் உன்னைப்பற்றிப் பேசத்துவங்கினார்—"

"என்னைப்பற்றியா ?" என்றான் ஸர்வஜித்.

"ஆம், உன்னைப்பற்றித்தான். உன்மேல் சுமந்திருக்கிற குற்றத்தைப் பற்றிச்சொன்னார். நான் உடனே உன்னை குற்றவாளியென்று ஒருக்காலும் எண்ணவில்லையென்று சொன்னேன்; அதற்கவர் குற்றஞ் செய்தது உண்மையா இல்லையாவென்பதை யோசிப்பது பயன்படாதென்றும், ஆனால் இருக்கிற ஆதாரங்கள் உருசுக்கள் எந்த நியாயாதிபதியையும் நீ குற்றவாளியென்றே எண்ணச்சொல்லுமென்றும், ஆகையால் உனக்கு மரணதண்டனை கட்டாயம் விதிக்கப்படுமென்றுஞ் சொன்னார். இதைக்கேட்டவுடன் நான் நடுநடுங்கி விட்டேன். ஐயோ நானென்ன செய்வேனென்று கத்தினேன். பிரபு உடனே உன்னைத் தப்புவிக்க வழியிருக்கிறதென்று சொன்னார். எப்படியாகிலும் உன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று அவரைப்பிரார்த்தித்தேன். அதற்கவர் அவருடைய நிபந்தனைக்கு நான் கட்டுப்பட்டால் உன்னை தப்புவிப்பதாகச் சொன்னார். அதென்னவென்று கேட்க, நான் அவருடைய மனைவியாக வேண்டுமென்று சொன்னார். நான்இன்னது சொல்லுவதென்று தெரியாமல் சிறிது நேரந்தயங்கி, உன்னுடைய உயிரை எல்லாவற்றிற்கும் மேலானதெனக் கருதி, இச்சமயத்தில் என்னுடைய சுயநன்மையைப் பாராட்டுவது பிசகென நினைத்து அநங்கருடைய நிபந்தனைக்கு உட்படுவதாக சம்மதித்தேன். இந்த வாக்குறுதியை பெற்றுக்கொண்டவுடன் அவர் நான்

செய்யவேண்டியது வேறென்றிருக்கிறதென்றார்; அதாவது அவர் சொல்லுகிற பிரகாரம் நான் உனக்கு ஒருகடிதம் எழுதவேண்டுமென்றார். நானும் அப்படியே செய்தேன்—"

"ஐயோ உன் கடிதம் எனது நம்பிக்கையை வேருடன் அறுத்து விட்டதே—" என்றான் ஸர்வஜித்.

"நான் இன்னும் என் வரலாற்றை முடிக்கவில்லை. நான் கடிதத்தை எழுதி அவர் கையில் கொடுத்த இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் என் தகப்பனார் உள்ளே பிரவேசித்தார். அப்பொழுது என்னுள்ளத்திலிருந்த துக்கம் வெடித்துக்கொண்டு என்னை ஹோவென்றலரச்செய்து விடும்போலிருந்தது. ஆயினும் உன்னுயிர் தப்பவேண்டுமென்ற ஒரே எண்ணத்தால் எனது துக்கத்தை வெளிக்காட்டாமல் பிரயாசத்துடன் அடக்கி, என்னுடைய முடிவை கேட்ட தகப்பனாரிடத்தில் நான் அநங்கரை விவாஹஞ் செய்துகொள்ள சம்மதித்ததாகச் சொன்னேன். அவரும் ஆச்சரியத்துடன் திகைத்து நின்றார். நான் அவ்விடம் விட்டு என்னிருப்பிடஞ் சென்றேன். இப்பொழுது இவைகளையெல்லாம் நான் சொன்னதின் கருத்து என்னவென்றால், நாளையன்று நியாயாதிபதிகள் உன் விஷயத்தில் என்ன முடிவுசெய்தாலும் நான் உன்னிடத்தில் வைத்திருக்கிற நேசங் குறையவில்லையென்று சொல்லுவதற்கே" யென்றாள்.

"இன்றிரவு நாம் பேச சமயம் வாய்த்ததைப்பற்றி சந்தோஷம். நீ சொல்லிவந்த விவரங்களைக்கேட்க இன்னும் சந்தோஷம். ஆயினும் நீ ஒன்றுக்குமஞ்சவேண்டாம். எனக்கு, நாளுக்குநாள் தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையதிகரிக்கிறது. அவர் எப்படியும் நம்மை கைவிடமாட்டாரென்று நான் உறுதியாய் எண்ணுகிறேன்—" என்று இப்படி ஸர்வஜித் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவ்வறையின் பிரகாசம் அதிகரித்திக்கொண்டிருந்தது போலிருந்தது. உடனே பேச்சை நிறுத்திவிட்டான். இருவரும் என்ன நடக்குமோ வென்றிருக்கையில், கவசந்தரித்த வீரனும் எழினிதரித்த சிமாட்டியும் தோன்றி ஸர்வஜித்தும் லீலாவதியும் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். அவ்வுருவங்கள் சமீபத்தில் வந்தவுடன், சிறுவனும் சிறுமியும் தங்களுக்கே தெரியாமல் ஆனந்த பரவசர்களாய், அவ்வுருவங்களுக்கு முன்பாக மண்டிபோட்டு விழுந்தார்கள். அவ்வுருவங்கள் தங்கள் முகங்களைத்திறந்து காட்ட, அம்முகங்கள் வெளுத்திருந்தபோதிலும், இச்சிறுவர்களிடத்தில் கருணைகொண்டவைகள் போலவும், அவர்களிடத்தில் பிரியங்கொண்டவைகள்போலவும் சந்தோஷத்தால் ஜொலித்துக்கொண்டிருந்தன. அவ்வுருவங்கள் தங்கள் கைகளை இருவர் தலையின்மேலும் ஒரே காலத்தில் நீட்டி அவர்களை ஏக காலத்தில் ஆசீர்வாதஞ் செய்பவைகள்போல் நின்றன. இப்படிச் செய்தவுடன் இருவர்களும், சிறுவனையும் சிறுமியையும் அங்குவிட்டகலும்படி சொல்லுவதுபோல, கதவை நோக்கிக் கையை நீட்டினார்கள். உடனே மண்டி போட்டிருந்தவர்கள் எழுந்து கதவண்டை விரைந்து செல்ல உருவங்களும் மறைந்துவிட்டன. கதவண்டையுள்ள ஒரு வாங்கில் சேஷியம்மாள் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளை யெழுப்பி மூவரும் வெளியே செல்லுகையில் எங்கிலும் இருட்டியிருந்தது. இருட்டில் கூடியமட்டும் ஜாக்கிரதையாய் சென்று கொண்டிருக்கையில் எதிரே விரைந்து வருகிற ஒருவனுடைய கால்

அடி சப்தங்கள் கேட்டன. வந்தவனுடன் மோதிக்கொள்ளாமலிருக்க மூவரும் ஒரு தூணுக்குப்பின்னால் ஒதுங்கி நின்றார்கள். வந்தவன் கோயிலுக்குள்ளே நுழைந்தான். உடனே ஸர்வஜித்துக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. இப்போது கோயிலுக்குள் பிரவேசித்தவன் தான் முன்னமே ஒருநாள் கோயிலில் தன்னையே குற்றஞ்சாட்டிக்கொண்டு பலி பீடத்திற்கருகில் மண்டி போட்டு உட்கார்ந்திருந்தவன் தானோவென்று நினைத்தான். இவன் அங்கு வருவதை யுத்தேசித்துத்தான் அவ்வுருவங்கள் ஸர்வஜித்தையும் லீலாவதியையும் அக்கோயிலை விட்டுப்போகும்படி சைகை செய்தனவோவென்று இருவரும் எண்ணினார்கள்.

உள்ளே நுழைந்தவனுக்குப் பின்னால் கதவுஞ் சாத்திக்கொண்டது; ஸர்வஜித் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு அவ்விடம் விட்டகலுகிற சமயத்தில் சலசலவென்ற சத்தம் காதில் விழுந்தது. அதே காலத்தில் காரணஞ்சொல்ல முடியாத விநோதமான ஒரு சிறு மினுமினென்ற வெளிச்சம் அவ்விருட்டறையில் அக்கோயிலின் கதவை நோக்கி வந்துகொண்டிருந்தது. இதைக் கண்டவுடன் பயந்து அம்மூவர்களும் மறுபடியும் தூணின் பின்னே ஒதுங்கி நின்றார்கள். அவ்வெளிச்சம் கிட்ட வரவர அவ்வெளிச்சத்தின் மத்தியில் ஒரு கருத்ததுணியால் மூடப்பட்ட ஒரு மனித உருவத்தைக் கண்டார்கள். இவர்களுடைய சமீபத்தில் வந்தவுடன் அவ்வுருவம் முகத்தின் மூடுதலை நீக்கவே, அவர்கள் இது ஒரு மனிதனுடைய எலும்புக் கூட்டின் தலையெனக் கண்டு நடுங்கினார்கள். சேஷி தேகம் வடவடவென்று பனிகாலத்தில் நடுங்குவதுபோல நடுங்கிற்று; லீலாவதியோ கீழே விழாதபடி ஸர்வஜித்தை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்; அதே காலத்தில் வெளிச்சம் மறைந்துவிட்டது; சலசலவென்ற சத்தம் ஓய்ந்தது; எல்லாம் முன்போல இருட்டியிருந்தது.

மூவரும் பிறகு ஒரு வார்த்தை கூடபேசாமல் கீழே இறங்கிச்சென்று, காவலன் நின்றுகொண்டிருக்குமிடத்திற்கு வந்தார்கள். இங்கு ஒருவரிடமிருந்தொருவர் பிரிய வேண்டியிருந்ததால், ஸர்வஜித் லீலாவதியைப்பார்த்து, "லீலாவதி, நாளைக்கு நடப்பதை நான் அறியேன். தீங்கு ஒன்றும் வராது என்ற நம்பிக்கை மாத்திரம் திடமாயிருக்கிறது. ஆயினும் ஈசன்செயல் எப்படியோ? நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்" என்றான். லீலாவதியின் கண்களில் ஜலங்கள் ததும்பின. "ஸர்வஜித், உன்னைக் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டேயிருக்கிறேன். உன்னை யவரே காப்பாற்றுவாராக" என்று சொல்லிவிட்டு சேஷியுடன் திரும்பினாள். ஸர்வஜித்தும் கோபலன் இதுவரையிலும் காத்துக்கொண்டிருந்த தனதறைக்குள் சென்றான்.

31-வது அத்தியாயம்.

மறுநாள் அதிகாலையிலேயே மாளிகையிலுள்ள வேலைக்காரர்களெழுந்து போஜனமண்டபத்தை நியாயஸ்தலமாக மாற்றுவதில் பரபரப்பாயிருந்தார்கள். அம்மண்டபத்தின் மத்தியிலுள்ள பெரிய மேஜையானது அப்புறப்படுத்தப்பட்டது; மடக்குக் கதவுள்ள வாசற்படிக்கு நேர் எதிரேயுள்ள சுவற்றை யொட்டி ஒரு மேடை யெழுப்பப்பட்டு, அம்மேடையின் மத்தியில்

நியாயாதிபதிக்கென்று நாற்காலியும் போடப்பட்டது. மேடைக்கிடது பக்கத்தில் ஜூரி (Jury) உட்கார இருவரிசையாக பன்னிரண்டு நாற்காலிகளும், வலது பக்கத்தில் பப்ளிக் பிராஸிக்யூடருக்கு ஒரு மேஜையும் நாற்காலியும், அந்நாற்காலிக்குப் பின்னால் அந்த ஜில்லா அதிகாரிக்கும் புஷ்யமித்தரர் அநங்கன் இவர்களுக்கும் மூன்று நாற்காலி எழுது கருவிகளோடு கூடிய ஒரு மேஜையும் ஆசனங்களும் போடப்பட்டன.

ஜூரியாக நியமிக்கப்பட்டவர்கள் ஒன்பது மணிக்குள் மாளிகை வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்திறங்கின சிறிது நேரத்திற்கெல்லாம் முக்கிய நியாயாதிபதியும் அவரைச் சேர்ந்தவர்களும் அவரவருக்குரிய உடைகளையுடுத்துக்கொண்டு நியாயஸ்தலத்தில் அவர்களுக்கென்று ஏற்பட்டிருந்த ஆசனங்களிலுட்கார்ந்தார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் புஷ்யமித்திரரும் அநங்கனும் பிரவேசித்து, நியாயாதிபதிக்கு மரியாதியாய்க் குனிந்து விட்டு தங்கவிடத்திலுட்கார்ந்தார்கள். உண்மையில் அவனது உள்ளத்தில் கொந்தளித்துக்கொண்டிருந்த மனோவிகாரங்களை வெளிக்காட்டாதபடி அநங்கன் முகத்தை விறைப்பாய் வைத்துக்கொண்டிருந்தான். புஷ்யமித்திரருடைய முகமோ தன்னைச் சுற்றி நடந்துகொண்டிருந்த ஒவ்வொன்றாலும் தனது மனதிலுணர்ச்சிகள் எவ்வளவு ஆழ்ந்து கிளரப்பட்டனவென்பதைக் காட்டும்படி மெத்தவும் வெளுத்திருந்தது. ஒரு பக்கத்தில் அநங்கன் தனது மனோரதத்திற்கு இடையூறாயிருந்த ஸர்வஜித்தைத் தன் காலின்கீழ்வைத்து நசுக்கிவிடவேண்டுமென்ற கொடூரமான உறுதியோடு இருந்தான். மற்றொரு பக்கத்தில் புஷ்யமித்திரர் தனது ஓரே செல்வபுத்திரனுடைய இழப்பையும், அவனையிழந்ததற்குக் காரணமாக தான் உயிருக்குயிராய் வளர்த்து வந்த ஸர்வஜித்தே இருந்தானே யென்பதையும் நினைத்து நினைத்து உருகிக்கொண்டிருந்தார்.

இது நிற்க, அந்த ஜில்லா அதிகாரி ஜூரியாக நியமிக்கப்பட்ட பன்னிரண்டு பேர்களையும் கூட்டிக்கொண்டு உள்ளே பிரவேசித்தார். பிரவேசித்தவர் ஜூரிமார்களை அவரவர்களாசனங்களி லுட்காரச்செய்து, அவ்விடம் விட்டகன்று, பத்துநிமிஷங்கள் செல்ல ஸர்வஜித்தோடு திரும்பி வந்தார். கைதியைக் கூட்டிக்கொண்டுபோய் கூட்டில் விட்டுவிட்டு பிரபுக்களுக் கருகில் தமதுநாற்காலியி லுட்கார்ந்தார். இதற்குப் பிறகு சோம்பேரிகளும்விசாரணையில் சம்பந்தப்படாத மற்ற ஜனங்களும் உள்ளே வராதபடி மடக்குக் கதவுகள் சாத்தப்பட்டன. ஏனெனில், அக்காலத்தில் இக்காலத்தைப் போலில்லாமல் குற்ற விசாரணைகள் இரகசியமாகவே நடத்தப்பட்டு வந்தன.

கூட்டில் நிறுத்தப்பட்ட ஸர்வஜித்தை கவனிப்போம். அவனது முகம் வெளுத்திருந்தபோதிலும் மனங்கலங்கினவனாகத் தோன்றவில்லை. அவன் கன்னங்களில் தேகசுகத்தைக் காட்டக்கூடிய சிவப்பு நிறம் ஒன்றுமில்லை. ஆயினும் அவன் கண்களில் கம்பீரமான மனோதைரியத்தைக்காட்டுகிற ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவனது உயர்ந்த, அழகிய மெல்லிய உருவம் அதன் முழுஉயரமும் உயர்ந்து நின்றது. அவன் தலையை கம்பீரமாகவே தூக்கி நின்றான். கூட்டில் ஏறும்போது முதலில் நியாயாதிபதிக்கும், பிறகு மற்றவர்களுக்கும் மரியாதையாகத் தலைவணங்கினான். புஷ்யமித்திரருடைய கண்களிலிருந்து கண்ணீர்கள் சொரிந்துகொண்டு வந்தன. தனக்குள்ளேயே, "இவன்

குற்றவாளியாயிருக்கக்கூடுமோ? முகம் குற்றவாளியாகத்தென்படவில்லையே. ஆனால் அப்படி நினைக்க இடமில்லை, இடமில்லை" என்றார்.

இவரது முகத்தை கவனித்துக்கொண்டிருந்த அநங்கன், "பார்த்தீர்களா இவனது திகைக்கச்செய்கிற கபடத்தை? ஒன்றுமறியாத மாசற்றவன் போல் நிற்கிறான்" என்று இரகசியமாய் அவர் காதில் சொன்னான். ஆனால் புஷ்யமித்திரர் இதற்கு பதில் கூறவில்லை.

அந்த ஜில்லா அதிகாரியோ ஸர்வஜித்தைக்காட்டி அநங்கனைப்பார்த்து, "தாங்கள் மாத்திரம் அசைக்கமுடியாத அத்தாக்ஷிகளால் இச்சிறுவன் ஸுரேந்திரனைக் கொன்றானென்று காட்டியிராவிட்டால், அவன் முகத்திலிருந்து நான் அப்படி எண்ணமாட்டேன்" என்றான்.

"தங்களிடத்தில் தனியாக ஒத்துக்கொண்டதாகச் சொன்ன விஷயங்களை நியாயாதிபதிக்குமுன் திரும்பவும் ஒத்துக்கொள்ள இருக்கிறவனாக ஸர்வஜித்தைப் பார்த்தால் தோன்றவில்லையே" என்று புஷ்யமித்திரர் அநங்கன் காதில் சொன்னார்.

"பார்த்தீரா அந்தப்பயல் எவ்வளவு நெஞ்சழுத்தமுள்ளவனென்பதை. அவன் என்னிடத்தில் செய்த குற்றங்களை ஒத்துக்கொண்டபோது அவன் மனதுவியாதியால்இளகியிருந்தது. அப்பொழுது உண்மையில் பச்சாத்தாபங் கொண்டேன்". நியாயாதிபதி ஜில்லா அதிகாரியைப் பார்த்து, "அபாரமான குற்றஞ்சாற்றப்பட்டிருக்கிற இவனுக்கு ஏன் விலங்கிடவில்லை" என்றார்.

"பிரபு புஷ்யமித்திரர் அப்படிச் செய்யவேண்டாமென்று கேட்டுக்கொண்டபடியால் கைதி விலங்கிடப்படவில்லை" என்றார் அதிகாரி.

"அப்படியானால் நாம் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. விசாரணை துவங்கட்டும்" என்றார் நியாயாதிபதி.

உடனே பப்ளிக் பிராஸிக்யூடர் எழுந்து நியாயாதிபதியை நோக்கிப் பின்வருமாறு பேசினார்:—

தங்களது விசாரணைக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிற இவ்வழக்கை தாங்கள் முற்றிலுமறியும் பொருட்டு, தங்களது சமுகத்தில நிறுத்தப்பட்டிருக்கிற இந்த ஸர்வஜித் பிரபு புஷ்யமித்திரருடைய குடும்பத்தில் உறவால் சம்பந்தப்படாமலிருந்த போதிலும் அவரால் குழந்தைப்பருவம் முதற்கொண்டே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறானென்பதைச்சொல்லுவது அவசியமாகும். இவனது வமிசத்தை யறிந்தவர் ஒருவருமில்லை. இவன் பிரபு புஷ்யமித்திரரால் வாஞ்சையாய் வளர்க்கப்பட்டுவந்தவன். இவனை அவர் தனது சொந்தப்புத்திரனாக சுவீகாரஞ் செய்து கொள்ளாதபோதிலும் தனது சொந்த மக்களுக்குச் சமமாகவே வளர்த்துவந்தார். இப்படி பல வருஷங்கள் சென்றன. சுமார் மூன்று நான்கு மாதங்களுக்கு முன், நான் இச் சமுகத்தில் அதிகமாய் விஸ்தரிக்கவேண்டாத சில காரணங்களைக்கொண்டு பிரபு புஷ்யமித்திரர் அமராபுரியை விட்டு வெளியே போகும்படியாயிற்று. இந்த சங்கடகாலத்தில் பிரபு அநங்கர் தனது அனந்தகிரிமாளிகையை உபயோகித்துக் கொள்ளும்படி பிரபு புஷ்யமித்திரரைவேண்டினார்; அதேப்பிரகாரம் பிரபு

புஷ்யமித்திரர் பிரபு ஸுரேந்திரனென்று பெயர்கொண்ட தனது புத்திரனோடும், பத்தொன்பது வயதுள்ள சீமாட்டி லீலாவதியென்று பெயருள்ள தனது புத்திரியோடும், இங்குவந்து சேர்ந்தார். ஸர்வஜித்தும் இவர்களோடு வந்தவன். இப்படி தனது பரிவாரங்களுடன் பிரபு புஷ்யமித்திரர் இம்மாளிகையில் குடியேறினார்.

அவர்கள் அனந்தகிரிக்கு வந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஒரு நாள் ஸர்வஜித் சீமாட்டி லீலாவதியிடத்தில் நேசவார்த்தைகளைப் பேசியதாக பிரபு புஷ்யமித்திரருக்குத் தெரிந்தது; உபகாரியின் பெண்ணென்பதைக் கூட நினையாமல் நன்றி விசுவாசம் எல்லாவற்றையும் மறந்து சீமாட்டியின் மனதைக்கவர எத்தனித்தது எவ்வளவு நெஞ்சுத்துணிவான காரியம் என்றெண்ணியும், அவனுடைய வார்த்தைகளால் மயங்கி காதல்கொண்டு சீமாட்டி லீலாவதி குலம் கோத்திரம் இன்னதென்று தெரியாதவனை விவாகஞ்செய்துகொள்வது கௌரவக்குறைவென்றெண்ணியும் பிரபு புஷ்யமித்திரர் அச்சிறுவன் செய்தகாரியத்தில் தனது முழு அருவெறுப்பைக்காட்டினதோடுங்கூட, அவ்விருவரும் இனிச்சேராதபடி ஏற்பாடுகளையுஞ்செய்தார். ஸர்வஜித்தை அதுமுதற்கொண்டு தன்னறையிலேயே சாப்பிடும்படியும், தனது மக்களோடு சேரக்கூடாதென்றும் தாக்கீதிட்டார். சிலவாரங்கள செல்ல, சீமாட்டி லீலாவதியை விவாகஞ்செய்யப்போகிற மணமகனும் அங்கீகரிக்கப்பட்டு பிரபு அநங்கர் தனது சொந்த இடமாகிய அனந்த கிரிக்கு வந்தார். இவர் வந்த சிலநாட்களுக்கெல்லாம் ஒரு அடாத காரியம் நடந்தது. குண்டகீலன் கார்த்தவீரன் என்ற மலைபதிபதிகள் சீமாட்டி லீலாவதியை பலவந்தமாக தூக்கிக்கொண்டுபோக எத்தனித்தாகள். அப்படித் தூக்கிக் கொண்டுபோகப்பட்டவளை வீரத்தனமாய் காப்பாற்றினது நமக்கு முன்னே நிற்கும் கைதிதான்; இச்செய்கை சீமாட்டி லீலாவதி அவனிடத்தில் ஏற்கனவே கொண்ட நேசத்தை உறுதிப்படுத்தி அதிகப்படுத்தியிருக்கக்கூடும். இச்சம்பவத்திற்குப் பிறகு அநேக வாரங்கள் சென்றன; இதற்கிடையில் ஸர்வஜித்தும் லீலாவதியும் சந்தித்த தாகத்தெரியவில்லை.

இப்படியிருக்கக் கர்த்தர் பிறந்த மறுநாள் சீமாட்டி லீலாவதியும் அவளுடைய தாதியுமாகிய சேஷியம்மாளும் சமீபத்திலிருக்கிற காட்டி லுலாவி வரச்சென்றார்கள். அங்கே அவர்கள் ஸர்வஜித்தைச் சந்தித்தார்கள்; சேஷியம்மாள் சொன்னதிலிருந்து அச்சந்திப்பு தற்செயலெனத் தெரிகிறது. ஆனால் அதே காலத்தில் பிரபு ஸுரேந்திரனும் காட்டிலிருக்கும்படி நேர்ந்தது; தன் சகோதரி ஸர்வஜித்தோடு சம்பாஷித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். சேஷியம்மாள் சொன்னதிலிருந்து பிரபு ஸுரேந்திரன் ஸர்வஜித்தை மனம் பொறுக்கக்கூடாதபடி பழித்துத்திட்டினதாயும், இதையெல்லாம் ஸர்வஜித் பொறுமையாய் சகித்துக்கொண்டு நின்றதாயுந் தெரிகிறது. ஒரு க்ஷணம் மாத்திரம் சர்வஜித் கோபம தாங்காமல் கத்தி உறையில் கை போட்டானும்; ஆனால் உடனே கையை யெடுத்துவிட்டு பிரபு ஸுரேந்திரன் என்ன செய்தாலும் என்ன திட்டினாலும் அவனால் சண்டைக்கிழுக்கப்படுவதில்லை யென்றுஞ் சொன்னானும். இத்தருணத்தில் சீமாட்டி லீலாவதி தமையனை அங்குவிட்டுத் தங்களோடு கோட்டைக்கு வரும்படிகெஞ்ச, அவன் அதற்கிசையாமல் தன் மனதிலுள்ளதையெல்லாம் ஸர்வஜித்துக்கு தாராளமாய் வெளியிட்ட பிறகுதான் வருவதாகச் சொன்னான். இதற்கு

மேல் சீமாட்டி லீலாவதி, ஸர்வஜித் முரட்டுத்தனமாய் நடக்கமாட்டானென முழு நம்பிக்கையால் அவ்விருவரையும் காட்டில் தனியாய்விட்டுவிட்டு சேஷியம்மாளோடு கோட்டைக்குத் திரும்பிச் சென்றாள். இதற்கப்புறம் ஸர்வஜித் கோட்டைக்குத் தனியாய் திரும்பிவந்தபோது இரண்டு மணிநேரம் சென்றிருக்கலாம். வந்தவன் வாசற்காப்போனை பிரபு ஸுரேந்திரன் வந்துவிட்டாராவென்று கேட்டான்; இல்லையென்று பதில் கூறின வாசற்காப்போன் ஸர்வஜித் ஒருமாதிரியாய் திகைத்து நின்றதைக் கண்டான்; தவிரவும் ஸர்வஜித்தின் உடுப்புகள் களிமண்ணால் அழுக்கடைந்திருப்பதையும் இரத்தக்கரை பட்டிருப்பதையும், இடுப்பில் கத்தியில்லாமல் உறைமாத்திரந் தொங்கிக்கொண்டிருப்பதையும் கண்டான் உடனே நடந்த சமாசாரத்தைச் சொல்லும்படி ஸர்வஜித்தைக் கெஞ்சினானும்; அதற்கொன்றும் பேசாமல் உள்ளே விரைந்துசென்றான். இதற்கிடையில் காட்டருவியின் கரைக்கருகே ஒரு ஒடிந்த கத்திப்பிடியை காட்டுக்காவலர்களிலொருவன் கண்டான்; எவ்விடத்தில் கத்திப்பிடி காணப்பட்டதோ அதற்கருகில் ஒரு குட்டை இரத்தந் தேங்கியிருந்தது. அவ்விடத்தில் பலத்தயுத்தம் நடந்ததாகத் தோற்றும்படி காலடிகளின் அடையாளங்களிருந்தன. அகப்பட்ட கத்திப்பிடி ஸர்வஜித்தினுடையதாயிருந்தது; அலகுமாத்திரம் இன்னுங் காணப்படவில்லை. மஹா சம்சயத்திற்கிடமான இவ்விஷயம் உடனேபிரபு புஷ்யமித்திராலும் பிரபு அநங்கராலும் அப்போது இங்கிருந்த பிரபுக்களாலும் விசாரிக்கப்பட்டது. இவ்விசாரணை நடக்கும்போது ஸர்வஜித்துமிருந்தான்; அவனை விசாரிக்க அவன் பிரபு ஸுரேந்திரனுக்கு என்ன நேர்ந்ததென்று தனக்கொன்றுந் தெரியாததாகச் சொல்லிவிட்டான். இவ்விசாரணையின் மத்தியில் மற்றொரு காட்டுக்காவலன் பிரபு ஸுரேந்திரனுடைய இறகோடு கூடிய தொப்பியையும் சித்தரித்த சால்வையையு மெடுத்துக்கொண்டு வந்தான்; தான் மீன் பிடிக்கும்போது அவைக ளிரண்டும் வலையி லகப்பட்டதாகச் சொன்னான். இறகு ஒடிந்தும் சால்வை கிழிந்தும் இருந்தது; ஆனால் அவைகள் பிரபு ஸுரேந்திரனுடையதென்று காண்பது கடினமாயில்லை. இவைகளிரண்டும் ஸர்வஜித்துக்குமுன்பாக காண்பிக்கப்பட்டபோது, பச்சாத்தாபத்தால் அடிபட்டவன்போல் தோன்றினான்; அவன் முகம் திடீரென்று வெளுத்துவிட்டது; ஏக்கத்தால் ஹோவென் றலறிக்கொண்டு பிரக்ஞை தப்பிக் கீழே விழுந்தான்".

இத்தருணத்தில் ஸர்வஜித், "ஆம்! மெய்யே; பிரபு ஸுரேந்திரன் உண்மையில் அருவியில் முழுகி யிறந்துவிட்டா னென்பதை யறிந்தவுடன் என் ஆக்கந்தாங்கவில்லை. பிரபு நியாயாதிபதிகளே, இவர்கள் என்னை விசாரித்தபோது நான் மூர்ச்சை யடைந்ததால் என்னுடைய நியாயங்களையும முகாந்திரங்களையும் எடுத்துக்காட்ட எனக்கு சந்தர்ப்பப்படவில்லை; மூர்ச்சை தெளிந்தெழுந்தபோது என்னுடைய நியாயங்களைக் கேட்காமலே என்னை விலங்கிட்டு இருட்டறையிலடைத்து விட்டார்கள்" என்றான்.

"சிறிது நேரத்திற்கெல்லாம் நீ சொல்லவேண்டியதை யெல்லாம் கேட்போம். இப்போது பப்ளிக் பிராஸிக்யூடர் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லட்டும்," என்றார் நியாயாதிபதி.

இதற்குமேல் பப்ளிக் பிராஸிக்யூடர் சொல்லுகிறார்:—

இவனை சிறைசெய்த இரண்டாநாள் இராத்திரியில், பிரபு அநங்கரின் காரியஸ்தனாகிய வரதனென்பவன் இவன் தன் சிறையிலிருந்து தப்பியோடி விட்டதைக்கண்டான்; உடனே கோட்டையாட்களி லிருவரை இவனைப்பின் தொடர்ந்து சென்று பிடித்து வரும்படி யனுப்பினான். பின் தொடர்ந்தவர்களுக்கும் பின்தொடரப்பட்டவனுக்கும் என்னநேர்ந்ததென்பது அப்போது தெரியவில்லை; இப்போது எல்லாச் சந்தேகங்களும் நீங்கிவிட்டன. தப்பித்துச்சென்ற இரண்டு மூன்று மணி நேரங்களுக்குள்ளாக ஸர்வஜித் கோட்டைக்குத் திரும்பிவந்தான்; இவன் கோட்டை வாசற்படியை கிட்டின சமயத்தில் மலைத்தலைவர்கள் சீமாட்டி லீலாவதியை பலவந்தமாய் தூக்கிக்கொண்டு எதிரே வந்தார்கள்; நமது கைதி ஒப்பற்ற தைரியத்தோடு அவர்களைத்தாக்கி சண்டைசெய்து சீமாட்டி லீலாவதியை விடுவித்தான்; இவன் செய்தகாரியம் மிதமில்லாமல் புகழத்தக்கதே; ஆனால் இச்சண்டையில் பலமாக மண்டையிலடிபட்டு மூர்ச்சித்து தன்னறைக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டான். காயத்தின் காரணமாய் கைதிக்குச் சுரமும் சன்னியும் பிறந்தது; காயப்படுத்தப்பட்ட இரண்டாநாள் கோட்டை வேலைக்காரரிருவருடைய பிரேதங்களும் காட்டில் காணப்பட்டதாகக் கேள்விப்பட்டான். உடனே தான் செய்த குற்றத்தை ஒத்துக்கொண்டு விடுவதாக, பிரபு அநங்கருக்குச் சொல்லி யனுப்பினானும்".

ஸர்வஜித் தான் சிறையிலிருந்து தப்பித் தோடினதாகச் சொன்னதை மகா கடினத்துடன் வாய்ப்பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான்; ஏனெனில் தானிதைப்பற்றிப் பேசினால் சீமாட்டி லீலாவதியின் பெயரையும் அவ்வளவு மனிதர்களுக்கு முன் சம்பந்தப் படுத்தவேண்டுமென்றும், அப்படிச் செய்வது சரியல்லவென்றுங் கண்டு,அநங்கன் தண்டனைக்குத் தப்பித்தோடும்படி கேட்டுக்கொண்டதை மறைத்து தானே தப்பியோடியதாக பப்ளிக் பிராஸிக்யூடர் சொன்னதை மனஞ்சகித்துக் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் தான் பிரபு அநங்கனுக்குக் குற்றஞ்செய்ததை ஒத்துக்கொள்ளுவதாகச்சொல்லியதைக் கேட்கையில் அவன்மனம் தாங்கவில்லை.

முகம் சிவக்க, கண்களில் பொறிபறக்க, ஸர்வஜித் நியாயாதிபதியைப் பார்த்து, "அது பொய், அது பொய்" என்று கத்தினான்.

உடனே ஜில்லா அதிகாரி எழுந்து, "சிறுவனே, வாயை மூடு. பப்ளிக் பிராஸிக்யூடர் சொல்லிக்கொண்டிருக்கும்போது நீ அடிக்கடி தடுத்தால், நியாயாதிபதியின் அநுமதியைப்பெற்றுக்கொண்டு உன்னை அப்புறப்படுத்துவேன் அல்லது விலங்கிடுவேன்" என்று கடிந்து சொன்னார்.

ஸர்வஜித் உடனே நியாயாதிபதிக்கு வணங்கி உதட்டைக் கடித்துக்கொண்டு சும்மா நின்றான்.

மறுபடி பப்ளிக் பிராஸிக்யூடர் மேலே சொல்லுகிறார். "பிரபு அநங்கருக்கு ஸர்வஜித்தால் அனுப்பப்பட்டவன் அவரது காரியஸ்தன் வரதன். ஸர்வஜித் வேண்டிக்கொண்டபடி அநங்கரும் கைதியினறை சென்றார். அச்சமயத்தில் கைதி துக்கித்துக்கொண்டு ஏக்கத்திலமுழ்ந்திருந்தான். அவன் நிலை மகா பரிதாபமாயிருந்தது; முதலில் தான் சீமாட்டி லீலாவதியின் பிரிய

த்தை வஞ்சகமாய் அபகரிக்க எத்தனித்ததைக்குறித்து வருத்தப்பட்டான். தனதுபகாரிக்கு கடுமையான துரோகஞ் செய்ததாக அழுதான்; பிறகு கண்ணீர்கள் சொரிய, விம்மி விம்மி அழுதுகொண்டு பிரபு ஸுரேந்திரனை காட்டாற்றின் கரையிற்கொன்றது தான் தானென்றும், பிரபு அநங்கரின் ஆட்களை வஞ்சகமாய்க்கொன்றது தானேயென்றும், தன்னைக்காப்பாற்றவேண்டுமென்றும் கெஞ்சினன். பிரபு அநங்கர் சொல்வதை நாம் நம்பினல்,—நம்பாமலிருக்கக்காரணமில்லை—பிரபுவை நம்பினல், நமக்கு முந்தி நிற்கிற கைதி மூன்று கொலைகள் செய்திருக்கிறதாக ஏற்படுகிறது. பிரபு அநங்கருடைய வேலையாட்களை கொன்றது தன்னைக் காத்துக்கொள்ளச்செய்ததால் கொலையாகாதென்று சிலர் வாதிக்கலாம். அப்படி வாதித்தல் சரியாகாது. ஏனெனில் முதலாவது, கைதி கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கத் தப்பித்தோடியது பிசகு; இவனைப்பின்தொடர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் நியாயாதிகாரிகளின் கடமையைச் செய்தார்கள். ஆகையால் அவர்களைக் கொல்லுவது நியாயாதிகாரிகளைக்கொன்றால் எப்படியோ அப்படியே கொலையாகும். தவிரவும், பிரபு அநங்கர் சொல்லுவதிலிருந்து அவருடைய வேலைக்காரர்கள் ஸர்வஜித்தைப் பிடித்தபோது அவன் வீண் சண்டைசெய்யாமல் அவர்களோடு கோட்டைக்குத் திரும்புவதாய்ச் சொன்னதாயும், அவர்களும் இவன் வார்த்தைகளில் பூர்ண நம்பிக்கைவைத்து அவனுக்கு விலங்கிடாமல் தங்களிருவருக்கும் நடுவில் நடத்திச்சென்றதாயும், இவ்விதமாய் போய்க்கொண்டிருக்கையில் ஸர்வஜித் சமயம்பார்த்து அவர்கள் எதிர் பாராதபடி திடீரென்று ஒருவனை பின்புறத்திலிருந்து குத்திக்கொன்று மற்றவனையும் சடுதியில் கொன்றுவிட்டதாகவும் வெளியாகிறது. இவைகள் தான் நான் தங்கள் சமூகத்திற் குறிக்கையிடவேண்டிய விஷயங்கள். பிரபு ஸுரேந்திரனை ஸர்வஜித் கொன்றது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுவிட்டால், நாம் வேலையாட்களின் கொலையைப்பற்றி விசாரிப்பது அநாவசியமாகும். நான் கடைசியாக சொல்லுவது யாதெனில், நம்முன்னிற்கிற கைதி குற்றவாளியல்லவென்று நிரூபித்துவிட்டால் எனக்கு மகா சந்தோஷமாயிருக்கும். ஆனல் பொய்சொல்லி தப்பிக்கொள்ளலாமென்ற தவறுதலான எண்ணங்கொண்டிருக்கும் பக்ஷத்தில் கோர்ட்டாரை அலக்ஷியஞ் செய்வதாகும். அப்படி அவன் செய்வதைவிட குற்றத்தை ஒத்துக்கொண்டு நியாயாதிபதியை கருணைகாட்டி இரக்ஷிக்கும்படி பிரார்த்திப்பது சிலாக்கியமாகும்'' என்று சொல்லி முடித்து பப்ளிக் பிராஸிக்யூடர் உட்கார்ந்தார்; அதற்குமேல் இரண்டு நிமிஷங்கள்முடிய அந்த நியாயஸ்தலம் முழுதும் நிச்சப்தமாயிருந்தது.

“இப்பொழுது சாக்ஷிகள் முன் வந்து தங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லட்டும்'' என்று நியாயாதிபதி முதலில் வாசற்காப்போனைக் கூப்பிட்டார். அவன் நாம் முன்னமேயே அவனைப்பற்றி எழுதியிருக்கிறவைகளைச் சொன்னன். பிறகு காட்டுக்காவலர்கள் தங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னார்கள். இவர்கள் சாக்ஷி சொல்லுகையில் ஒடிந்த கத்திப்பிடியும், இறகுடனுள்ள தொப்பியும், கிழிந்த சால்வையும் கோர்ட்டாருக்கு முன் கொண்டுவரப்பட்டன. பிறகு கர்த்தர் பிறந்த நாளுக்கு அனந்தகிரிக்கு வந்த பிரபுக்கள் விசாரிக்கப்பட்டார்கள்; அவர்கள் பிரபு புஷ்யமித்திரர் செய்த விசாரணையும்போது தங்களுக்குத் தெரிந்தவைகளைத் தெரிவித்தார்கள். சேஷியம்மாளை விசாரிக்கவில்லை. அவள் சொன்ன யாவையும் பிரபுக்கள் மூலமாய்

அறிந்துவிட்டதால், நியாயாதிபதிக்கு அவளை தனியாய் விசாரிப்பது அவசியமெனப்பட்டது.

அடுத்தாற்போல் விசாரிக்கப்பட்டவன் வரதன். அவன் சாக்ஷி சொன்னதாவது; பதினான்கு பதினைந்து தினங்களுக்கு முன் ஒருநாள் இராத்திரி சுற்றிக்கொண்டு வருகையில், கோபுரக்கதவொன்று திறந்திருந்ததைக் கண்டேன்; உடனே சம்சயங்கொண்டு ஸர்வஜித் அறைக்கு விரைந்து சென்றேன். அங்கு ஸர்வஜித் இல்லை; அவன் ஓடிவிட்டதைக் கண்டு கோட்டை வேலைக்காரர்களிலிருவரை ஓடிப் பின் தொடர்ந்து ஸர்வஜித்தைப் பிடித்துவரும்படியனுப்பினேன். அவ்விருவர்களை பிறகு நான் உயிருடன் காணவில்லை; இரண்டு தினங்களுக்குப் பிறகு அவர்களுடைய சரீரங்கள் காட்டில் ஒரு புதரில் மறைபட்டுக் கிடந்தன. இதை யறிந்தவுடன் ஸர்வஜித்தினிடஞ் சென்று இம்மனிதர்களிறந்து கிடந்ததற்கு காரணத்தை வினவ, அவன் என்னைப்பார்த்து, "நீ பிரபு அநங்கரை இங்கு வரச்சொல்லு; நான் செய்திருக்கிற குற்றங்களை யெல்லாம் அவரிடத்தில் ஒத்துக்கொண்டுவிடுகிறேன் என்றான்" என்று இப்படி வரதன் சாக்ஷி சொல்லிக்கொண்டு வரும்போது ஸர்வஜித் வெடித்துக்கொண்டு வரும்போலிருந்த கோபத்தை மஹா கடினத்துட னடக்கிக்கொண்டு நின்றான்.

இதற்குப் பிறகு பிரபு அநங்கன் விசாரிக்கப்பட்டான். பப்ளிக் பிராஸிக்யூடர் தன்னிடத்தில் ஸர்வஜித் ஒத்துக்கொண்டதாகச் சொன்னதையெல்லாம் பிரபு அநங்கன் வற்புறுத்தினான். தான் சொல்லுவதனைத்தும் மெய்யென்று எல்லாரும் எண்ணும்படியான மாதிரியாய்ப்பேசினான். இவன் சொல்லிக்கொண்டு வந்ததையெல்லாம் ஸர்வஜித் முகம் சிவக்க, கண்கள் மின்ன, உதடுகள் துடிக்க,தேகம் பதைபதைக்கக் கேட்டுக்கொண்டிருந்தான். பிரபு புஷ்யமித்திரர் பிரபு அநங்கனது முகத்தையும் ஸர்வஜித்தின் முகத்தையும் மாற்றி மாற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு பக்கத்தில் பிரபு அநங்கன் பொய்சொல்லக்கூடுமென்று நினைக்க அவரது மனம் துணியவில்லை. மற்றொரு புறத்தில் ஸர்வஜித்தினுடைய கோபாவேசத்தின் தாத்பரியம் இன்னதென்று அவருக்கு விளங்கவில்லை. இக்காரணங்களைக்கொண்டு ஸர்வஜித் தன் சார்பாகச் சொல்லப்போவதைக் கேட்க பிரபு புஷ்யமித்திரர் ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி-ஏ.

[அடுத்த அத்தியாயமும் இனி வரும் விஷயங்களும் வெகு அற்புதமாயிருக்கும்.—ப-ர்.]

"வாலில்லாக் குரங்குகளின் பாஷை"

"குரங்கு பாஷையைக் கற்க ஆவல்கொண்ட புரோபசர்ரிச்சார்டு L கார்னர் என்பவர், ஆப்பிரிக்காக் கண்டத்து காட்டில் ஏராளமாய் சஞ்சரிக்கும்

குரங்குகளின் கீச்சிடுதல் தொனியை, இருபதுவருஷகாலமாக இருந்து, கவனித்துக் கேட்டுக்கொண்டு வந்ததில், அவைகள் செய்யும் தொனியில் இருக்கும் வித்தியாசத்தைச் செவ்வையாக அறியும்படியான அனுபவம் அடைந்து காங்கோவில், பெர்னாண்டு வாஸ் ஏரிக்கரைக்கு அருகாமையிலுள்ள, குரங்கு பாஷை கல்விச்சாலையிற் சேர்ந்து, ஒருவருஷகாலம் இடைவிடாமல் இன்றிக் கற்று பின்னர் நியூயார்க்குத் திரும்பி வந்தனர். தாம் கற்ற வித்தையின் அனுபோகத்தின் பேரில் தாம் பரிசோதித்தறிந்த விஷயங்களைப் பின் வருமாறு கூறுகிறார். "இருபது அல்லது இருபதுக்கு மேற்பட்ட வார்த்தைகளாலேயே, சிம்பன்ஜீஸ் என்ற ஜாதிக் குரங்குகள் தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்படியான ஒரு பாஷை, இப்பிராணிகளுக்கு உண்டென்பதும், இது சரி, இது தப்பு, என்பதை அறியும்படியான புத்தியை உடைத்தாயிருக்கின்றனவென்பதும், கருப்பு, சிவப்பு, பச்சை முதலிய வர்ணங்களை அறியும்படியான சக்தியுடையனவென்பதும், தங்கள் சத்துருவை அறியும்படியான ஞானம் உண்டென்பதும்" இவைகளே. கொரில்லாஸ் என்ற ஜாதிக் குரங்குகள், மேற்கூறிய சிப்பன்ஜீஸ் என்ற ஜாதிக் குரங்குகளைவிட, புத்தியில் தாழ்ந்தவைகளாம். புரொப்பசர் கார்னர் என்பவரிடம் சிப்பன்ஜீஸ் என்ற குரங்கினத்தில் இருபதும், கொரில்லாஸ் ஜாதியில் ஒன்பதும், இருந்தன. இவைகளின் நடவடிக்கை, பழக்கம், வழக்கம் முதலியவைகளை நிரம்பவும் கவனமாக உற்றுப் பார்த்து வருவது கார்னரின் பழக்கமாயிருந்தது. சிப்பன்ஜீஸ் வகுப்பைச் சேர்ந்த ஆறுமாதக் குட்டி யொன்றைப்பிடித்து வளர்த்து வந்தார். அதற்கு சூஸியென்று பெயரிட்டிருந்தார். பென்சில் லோனியா கலாசாலையில் (சைகாலொஜி) என்ற சாஸ்திரம் கற்பிக்கும் வகுப்பில் பல விவகார விஷயத்தில் இது பெயர் போனதென்றும் அதற்குச் சந்தோஷம் உண்டாகும் பொழுதெல்லாம் அது சிரிக்கிறதென்றும் காண்பித்தார்.

"நான் கட்டளையிடும் எந்த உத்திரவையும் அது அறிந்து அதன்படி நடக்கிறது. அது தன் ஒரு காலை நாற்காலியின்மேல் எடுத்து வைக்கும்பொழுது நான் அதை எடுத்துக் கீழேவை யென்று சொன்னால் அதன்படி அது நடக்கும். அது ஏதாவது ஒரு தின்பண்டத்தைத் தின்றுகொண்டிருக்கையில் எனக்குக் கொஞ்சம் தரும்படி கேட்டால், அது உடனே எனக்கு ஒரு துண்டைக் கொடுத்துவிடும். வர்ணத்தை அறியும் சக்தியும், வார்த்தைகளைத் தெரிந்துகொள்ளும் சக்தியும், அதற்கு உண்டு என்பதைப் பரீக்ஷிப்பதற்காக, சிவப்புப் பெட்டியில் சர்க்கரையையும், பச்சைப் பெட்டியில் கொட்டைப் பாக்குகளையும் வைத்து சர்க்கரை யென்பதற்கு சிவப்பு என்றும், கொட்டைப்பாக்கு என்பதற்கு பச்சையென்றும் சொன்னால் அது வர்ணத்தையும் பெயரையும் அறிந்துசென்று தொட்டுக்காட்டும்"

நான் மரத்தால் பந்தைபபோலவும், சதுரமாகவும், முக்கோணவடிவாகவும் பலவிதமான உருவங்களைச்செய்து அதன் முன்வைத்தால் பார்வையிலேயே உருவங்களிலுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வதுமல்லாமல் அவைகளின் பெயரையும் அறிந்துகொள்ளும் சக்தியுடைத்தாயிருக்கின்றது. தனக்கு வைத்திருக்கும் பெயரை நன்றாக அறியும். தவிர "இங்கே வா, போ, உட்காரு, நில்லு" முதலிய பல வார்த்தைகளையும் நன்றாய் அறிந்திருக்கின்றது. இன்னும் இங்கிலீஷ் பிரெஞ்சு முதலிய வார்த்தைகளையும் சுலபத்தில் கற்றுக்கொடுக்கலாம்".

சதாரம்.

(முன் தொடர்ச்சி.)

மாயோன்:—நீ யார் அப்பா.

புஷ்பாங்கதன்:—நான் ஒரு வியாபாரி.

மாயோன்:—என்ன வியாபாரி.

புஷ்பாங்கதன்:—பட்டு வியாபாரி.

மாயோன்:—உன்னுடைய சொந்த ஊர் எது.

புஷ்பாங்கதன்:—சத்தியபுரி.

மாயோன்:—இப்பொழுது என்ன சரக்கு கொண்டுவந்திருக்கிறாய்.

புஷ்பாங்கதன்:—இப்பொழுது என்னிடத்தில் பட்டினாற் செய்யப் பட்ட ஒரு கைச்சவுக்கம் மாத்திரம் இருக்கிறது.

மாயோன்:—அதெங்கே பார்ப்போம் (புஷ்பாங்கதன் சவுக்கத்தைக் கையிற் கொடுக்கிறான்).

புஷ்பாங்கதன்:—ராஜன்! இந்தச் சவுக்கத்துக்குத் தகுந்த விலை கொடுத்து என்னைச் சீக்கிரம் அனுப்புங்கள்.

மாயோன்:—(சவுக்கத்தை நன்றாய்ப் பார்த்துவிட்டு) மந்திரீ, இந்தச் சவுக்கத்தைப் பார்த்தீர்களா. வெகு அழகாய்ச்செய்யப்பட்டிருக்கிறது. இது வரையில் இதற்குச்சமமான ஒரு சவுக்கத்தையாவது யான்கண்டதேயில்லை. இதன் வேலைப்பாடு எவ்வளவு விசேஷமாயிருக்கிறது (அதை நன்றாய்ப் பார்க்கிறபோது அதில் வரைந்திருக்கப்பட்ட சதாரம் என்ற நாமம் அவன் கண்ணில் தென்பட்டது.) பின் தனக்குள் சொல்லுகிறான். என்ன ஆச்சரிய மாயிருக்கிறது. இதில் சதாரம் என்றல்லவோ வரைந்திருக்கிறது. வஸ்திரத்தி னழகுக்குத்தக்க பெயராயிருக்கிறதே. சதாரம் என்றால் நல்லதாரமென்றருத் தம். ஆகையால் இது ஒருஸ்திரீயினால் செய்யப்பட்டிருக்கவேண்டியது. அவ ளுடைய வேலைப்பாடு இவ்வளவு நேர்த்தியாயிருந்தால், அவள்தான் எவ்வித மிருக்கமாட்டாள். ஐயோ! அவளை நினைக்கிறபோது என் நெஞ்சு உருகு கிறதே. அவள் என்னுயிரைக் கவர்ந்துவிட்டாளே. ஒருநாளுமில்லாத கெட்ட புத்தி எங்கிருந்தோ எனக்கு வந்துவிட்டதே. அவளைக் காணாது என்னுயிர் தரியாது. அவளை மணந்து அவளுடனே சுகமாயிருந்தாலொழிய என் மனம் திருப்தியடையாது; எவ்விதத்திலும் அவளைக் கண்டுபிடித்து அவளை மண ந்து கொள்ளவேணும். அவள் யாரென்று இவனிடத்தில் விசாரிப்போம். (வெளிப்படையாக) ஏ வியாபாரி, உன்னுடைய ஊர் எது?

புஷ்பாங்கதன்:—என்னுடைய ஊர் சத்தியபுரியென்று முன்னே தெரி வித்தேனே.

மாயோன்:—இந்தச் சவுக்கத்தைச் செய்தது யார்?

புஷ்பாங்கதன்:—யார் செய்தால் என்ன. இதையெல்லாம் தாங்கள் என்னிடத்தில் கேட்கவேண்டிய அவசியம் இல்லையே. சவுக்கம் வேணு மென்றால், அதை வாங்கிக்கொண்டு அதற்குத் தகுந்த விலை தந்தனுப்ப வேணும். வேண்டாமற்போனால், அதைத் திரும்பித் தந்து என்னைப் போ கச்சொல்லவேணும். இதையெல்லாம் விட்டுவிட்டு அவசியமில்லாத கேள்வி

களை எல்லாம் ஏன் கேட்கிறீர். மகாராஜ்! உங்களுக்கு இஷ்டமில்லாமற்போனால் கொடுத்துவிடும்.

மாயோன்:—இந்தச் சவுக்கம் நன்றாய்ச் செய்யப்பட் டிருக்கிறது. அதினால் தான் கேட்டேன்.

புஷ்பாங்கதன்:—நன்றாய்ச் செய்யப்பட்டிருந்தால், அதற்குத் தகுந்த விலை தந்தால் போதுமே. இதைச் செய்தவர் இன்னாரென்று அறியவேண்டிய அவசிய மில்லையே.

மாயோன்:—அப்படியல்ல. இதைச் செய்தது இன்னாரென் றறிந்து தகுந்த விலை கொடுத்தனுப்ப வேண்டும்.

புஷ்பாங்கதன்:—ராஜன்! சவுக்கத்துக்குத் தகுந்தவிலைதந்தால்போதும். செய்த ஆளுக்குத் தகுந்த விலைவேண்டாம்.

மயோன்:—ஆனாலும், இது யாரால் செய்யப்பட்டதென்று தயவு செய்து சொல். ஒரு பெண்மணியால் செய்யப் பட்டதென்று நினைக்கிறேன்.

புஷ்பாங்கதன்:—ராஜன்! தாங்கள் வேண்டாத கேள்விகளெல்லாம் கேட்கிறீர்கள். என் சவுக்கத்தைத் தாருங்கள்; நான் வந்தவழி போய்விடுகிறேன்.

மாயோன்:—என்னபயம் உனக்கு ஏற்பட்டது. இச்சபையில் யாராவது வர்த்தகன் சரக்குகள் கொண்டு வந்தால், அதற்குத் தகுந்த விலைகொடுத்தனுப்புகிறது வழக்கம். தவிர, அந்தச் சரக்கு ஒரு ஸ்திரியால் செய்யப்பட்டதா யிருந்தால் அவளுடைய விவேகத்தை மெச்சிக் கூடுதலாக விலை கொடுத்தனுப்புகிறதும் வழக்கம். அதை யுத்தேசித்துத்தான் கேட்டேன். தவிர இதற்குமுன் வந்திருக்கப்பட்ட வர்த்தகர்க ளிடத்திலும் இதேமாதிரியாகத்தான் விஜாரித்து அவர்களுக்குத் தகுந்த வெகுமதி யளித்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால் இது ஸ்திரீயினால் செய்யப்பட்டது தானே, சீக்கிரஞ் சொல்.

புஷ்பாங்கதன்:—ஆளுக்குத் தகுந்த விலை வேண்டாமென்று சொல்லியும் நீங்கள் சம்மதிக்க மாட்டேனென்கிறீர்கள். சவுக்கத்தைத் திரும்பித்தந்தால் நான் போகிறேனென்றாலும் சம்மதிக்க வில்லை. நல்லது கேட்டகேள்விக்குப் பதில்சொல்லிச் சீக்கிரம் இதை விட்டுப் போவோம்.

மாயோன்:—இது ஸ்திரீயால்தானே செய்யப்பட்டது?

புஷ்பாங்கதன்:—ஆம், இது ஸ்திரீயினால்தான் செய்யப்பட்டது.

மாயோன்:—எவ்விடத்திலுள்ள ஸ்திரீயால் செய்யப்பட்டது?

புஷ்பாங்கதன்:—என்னுடைய வீட்டில் அநேக ஸ்திரீகள் வேலைசெய்கிறார்கள். (தனக்குள் தெய்வமே, பொய்சொல்லவேண்டி யிருக்கிறதே) இதையும் ஒரு ஸ்திரீ செய்திருக்கலாம்.

மாயோன்:—இது எந்த ஸ்திரீயால் செய்யப்பட்டது?

புஷ்பாங்கதன்:—ராஜன், தாங்கள் வேண்டாத கேள்விகளையெல்லாம் கேட்கிறீர்கள். இஷ்டமுண்டானால் விலைதந்தனுப்புங்கள். இல்லாமற்போனால் சவுக்கத்தைத் திரும்பத்தாருங்கள்; நான் போய் விடுகிறேன்.

மாயோன்:—ஏ, வியாபாரி, நான் முன் சொல்லவில்லையா. இது யாரால் செய்யப்பட்டதென் றறிந்து, இதற்குத் தகுந்தவிலை கொடுக்கவேண்டியது என் கடமையாயிருக்கிறது. இதையார் செய்ததென்றுசொல்; உன்னைச் சீக்கிரம் அனுப்பிவிடுகிறேன்.

புஷ்பாங்கதன்:—அநேகம் ஸ்திரீகள் பட்டுவேலைகள் செய்கின்றனர். இவ்விதமிருக்க, இந்த சவுக்கம் எந்த ஸ்திரீயால் செய்யப்பட்டதென்று யான் எவ்வித மறிவேன்?

மாயோன்:—நன்றாய் ஆலோசித்துப்பார்.

புஷ்பாங்கதன்:—(சதாரம் சொல்லியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு) நன்றாய் ஆலோசித்துப் பார்த்தேன். இது யாரால்செய்யப்பட்டதென்று தெரிய ஒருமார்க்கத்தையும் காணேன்.

மாயோன்:— நிச்சயமாக உனக்குத்தெரியாதா?

புஷ்பாங்கதன்:—நிச்சயமாக எனக்குத் தெரியாது. தாங்கள் வேண்டாத கேள்விகளெல்லாம் கேட்கிறீர்கள்.

மயோன்:—ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப்பதில் சொல். (சவுக்கத்தை நன்றாய்ப் பார்த்துவிட்டு) சதாரம் என்ற ஸ்திரீ யார்?

புஷ்பாங்கதன்:—(மனதில் அதிகப்பதட்டத்துடன் தனக்குள் சொல்லுகிறான்) சதாரம், நீ கெடுத்துவிட்டாய் காரியத்தை. உன் பெயரை இதில் வரைந்திருக்கின்றனையோ. மோசம் போய்விட்டதே. என்ன செய்கிறது? இவ்வரசனுக்குப்பதில் சொல்லுகிறேன்.

மாயோன்:—என்ன ஆலோசிக்கிறாய்? சதாரம் யார்?

புஷ்பாங்கதன்:—சதாரமும் அந்த ஸ்திரீகளில் ஒருவள்தான்.

மாயோன்:—வியக்தமாய்ச் சொல். அந்த ஸ்திரீ உனக்கு என்ன வேணும்? இந்த ராஜ சபையில் பொய் சொல்லவே கூடாது.

புஷபாங்கதன்:—தாங்களோ வேண்டாத கேள்விகளையெல்லாம் கேட்கத்துணிந்துவிட்டீர்கள். இந்தச் சவுக்கத்தைத் தாங்கள் வாங்கிக்கொள்ள வேண்டாம். திரும்பித்தந்துவிடுங்கள்; நான் போய் விடுகிறேன். இதைத் திரும்பித் தருகிறதற்கு இஷ்டமில்லையானாலும் பாதகமில்லை. அவ்விதம் சொன்னால் நான் சும்மா போய்விடுகிறேன்.

மாயோன்:—அவ்விதமல்ல. அவள் இன்னாரென்றறிந்து, தகுந்த விலை தந்து சீக்கிரம் உன்னை யனுப்பிவிடுகிறேன். அவள் யார்? சொல்.

புஷ்பாங்கதன்:—சதாரம், என்பத்தினியின் பெயர். (தனக்குள்) ஐயோ, தெரியாமற் சொல்லிவிட்டேனே; என்ன ஆபத்துவரப்போகிறதோ, தெரியவில்லையே. சதாரப், உன்னை வெளியிட்டதின் காரணம் நீதான்.

மாயோன்:—அவள் இப்பொழுது எங்கிருக்கிறாள்?

புஷ்பாங்கதன்:—ராஜன்! தாங்கள் கேட்கத்தகாத கேள்விகளைக் கேட்கிறது நன்றாயில்லை.

மாயோன்:—அவளை யெங்கேயாவது தனிமையாய்விட்டு வந்தாயோ என்பதை யறியத்தான் கேட்டேன். சீக்கிரம் இதைச்சொல்லிவிட்டு விலையை வாங்கிக்கொண்டு போய்விடலாம்.

புஷ்பாங்கதன்:—(தனக்குள்) இவனோ என்ன சொல்லியும் கேட்கமாட்டேனென்கிறான். சதாரம் என்ன ஸ்திதியிலிருக்கிறாளோ தெரியவில்லை. அவளை விட்டுவந்து நாலுநாழிகையாய்விட்டது. இவனிடத்தில் தர்க்கிப்பதில் பிரயோசனமொன்றுமில்லை. ஆகையால் இவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுத் திரவியத்தை வாங்கிக்கொண்டு, சதாரம் இருக்கப்பட்ட இடத்திற்குச் சீக்கிரம் போகிறேன். (வெளிப்படையாக) ராஜன், இந்த ஊருக்கு வெளியில் ஒரு ஆலவிருக்ஷம் இருக்கிறது. அந்த விருக்ஷத்தின் நிழலில்

அவள் தங்கியிருக்கிறாள். அவள் தனியாயிருப்பதால், திரவியத்தைத் தாருங்கள்; அங்கே சீக்கிரம் போகவேணும்.

மாயோன்:—(சேவகனை அழைத்து இரகஸியமாகப் பின்வருமாறு சொல்லுகிறான்) இந்தச் சவுக்கத்தின் விலையைக் கேட்டு உன்னைக் கொண்டு கொடுவென்று சொன்னவுடன் நீ இவனை யழைத்து பந்தேகானாவில் பத்திரமாய் அடைத்துவிடவேணும்; தெரிந்ததா (வெளிப்படையாக)ஏ, வியாபாரி, உன் பத்தினி தனிமையாயிருப்பதால் இச்சவுக்கத்தின் விலையை வாங்கிக்கொண்டு சீக்கிரம் போய்விடு. இதின் விலையென்ன சொல்?

புஷ்பாங்கதன்:—தங்களுடைய இஷ்டம்போல் தரலாம்.

மாயோன்:—ஆனாலும் ஒருவிலை சொல்.

புஷ்பாங்கதன்:—பத்துவராகன் தாருங்கள்.

மாயோன்:—மந்திரீ, நான் முன் சொன்னவாக்கை பரிபாலிக்கவேண்டும். தகுந்த விலைகொடுக்கவேணுமென்று, இச்சவுக்கம் யாரால் செய்யப்பட்டதென்று கேட்டேன். இவனுடைய பத்தினியால் செய்யப்பட்டதென்று சொன்னான். ஆகையால் இவர்களைத் திருப்திசெய்ய ஐம்பதுவராகன் கொடுக்கவேணுமென்று தீர்மானித்திருக்கிறேன். ஏ, சேவகா, இவனை யழைத்துக்கொண்டுபோய் நம்முடைய பொக்கிஷத்திலிருந்து ஐம்பதுவராகன் கொடுக்கச்சொல்லிப் பதில் உடனே வந்து சொல். ஏ வியாபாரி, ஐம்பது வராகனை வாங்கிக்கொண்டுபோ. இதே மாதிரி வேறே வஸ்திரங்கள் கிடைக்குமானால் இவ்விடத்தில் கொண்டுவரவேணும். நான் தகுந்த விலைதருகிறேன். சேவகா, இவனைச் சீக்கிரம் அழைத்துக்கொண்டுபோ.

வியாபாரி:—ராஜன்! தங்களுக்கு அதிக நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறேன். யான்போய் வருகிறேன்.

[சேவகன் புஷ்பாங்கதனை அழைத்துக்கொண்டு, பந்தேகானாவில் அடைக்க, சூதொன்று மறியாத புஷ்பாங்கதன் விசனப்பட்டு தன் விதியை நொந்துகொண்டு வருத்தத்துடனிருந்தான்.]

(சேவகன் திரும்பி வருதல்.)

மாயோன்:—ஏ சேவகா, நான் சொன்னவற்றைச் செய்தாயா?

சேவகன்:—தங்களுடைய ஆக்ஞைப்படியே அந்த வர்த்தகனை சிறைச்சாலையிலடைத்து விட்டேன்.

சுசீலன்:—ராஜன்! தாங்கள் என்ன காரியம் செய்தீர்கள்! வர்த்தகனை சிறைச்சாலையிலடைக்கவா சொன்னீர்கள்! நன்றாயிருக்கிறது!

மாயோன்:—மந்திரீ! தங்களிடத்தில் ஒரு ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. நான் இந்தச் சவுக்கத்தைப்பார்த்தவுடன் அதிக ஆச்சரியமடைந்தேன். வெகு நேர்த்தியாகச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சவுக்கத்தில் சதாரம் என்ற ஒரு பெயர் வரையப்பட்டிருப்பதையும் கண்டேன். சதாரம் என்பது ஒரு ஸ்திரீயின் பெயரென்றும், இது ஸ்திரீயால் செய்யப்பட்டதென்றும் நிச்சயித்து, இச்சவுக்கமே இவ்வளவு நேர்த்தியாயிருந்தால் இதைச் செய்த ஸ்திரீ எவ்வளவு அழகாயும் எவ்வளவு புத்தியுள்ளவளாயுமிருக்கவேண்டுமென்று எண்ணினேன். உடனே அவள் பேரில் மையலுங்கொண்டேன். அவளை யெவ்விதத்திலாவது வரவழைத்து அவளை விவாகஞ்செய்து சௌக்கியமாயிருந்தாலொழிய என்னுயிர் தரியாதென்று மனத்திற் றோன்றிவிட்டது. அதற்காக அவளது வரலாற்றைக் கேட்டறிந்து, என்னுடைய காரியத்திற்குத் தடையாயிருக்கக் கூடிய இவனைக் காராக்கிரகத்தில் அடை

த்துவிட்டால் என் காரியம் சுலபமாய்க் கைகூடுமென்று நிச்சயித்து காராக்கிரகத்தில் அடைத்துவிட ஏற்பாடு செய்தேன். மந்திரீ, தாங்கள் வெகு நாளாக எனக்கு நல்ல ஆலோசனைகள் சொல்லித் தந்து என் காரியங்களையெல்லாம் நிறைவேறும்படியாகச் செய்திருக்கிறீர்கள். அதே மாதிரியாக, இப்பொழுதும் இப்பெண்ணை வரவழைத்து எனக்கு விவாகஞ்செய்து முடிக்க வேண்டும். சீக்கிரம் இதற்கு ஒரு ஆலோசனை செய்து, என் காரியத்தை நிறைவேற்றித் தாருங்கள். இந்த க்ஷணப்பொழுதே வேண்டிய ஏற்பாடு செய்யவேணும்.

சுசீலன்:—ஏ, ராஜன்! என்ன, இவ்விதமான புத்திவந்துவிட்டது தங்களுக்கு. ஒரு அரசனானவன் தன்னுடைய பிரஜைகளுக்கு ஒருவிதத்துன்பமும் நேரிடாமல், அவர்களைத் தன்னுயிர்போலக் காத்து, அவர்களுடைய சுகதுக்கங்களை தானே நேரிடக் கண்டு, கஷ்டங்களை நிவிர்த்திசெய்ய வேணுமென்று சாஸ்திரங்கள்முறையிடுகின்றன. தாங்களும்இதுவரையில் இதை ஒருவேத வாக்கியமாகக் கைக்கொண்டு நடத்தி வந்தீர்கள். அன்னிய ஸ்திரீகளை நம்முடைய மாதாவாக நினைத்து அவர்களைப் பூஜிக்கவேணுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதமிருக்க, தாங்கள் இவ்விதமான எண்ணத்தைக் கைக்கொண்டு இவ்வர்த்தகனை சிறையிலிட்டீர்கள். தவிர, அவளையழைத்துக்கொண்டுவரத் தகுந்த ஆலோசனை செய்யும்படியாகவும் உத்தரவு செய்கிறீர்கள். இதுவரையில் தங்களுக்கேற்பட்ட தர்மசிந்தனைகளெல்லாம் எவ்விடம்போய்விட்டனவோ? தவிர,

"மண்டலத்தோர்கள் செய்த பாவமன்னவரைச் சேருந்
திண்டிறன் மன்னர் செய்த தீங்கு மந்திரியைச் சேருந்
தொண்டர்கள் செய்ததோஷந் தொடர்ந்துதங் குருவைச்சேருங்
கண்டன மொழியாள்செய்த கன்மமுங் கணவர்க்காமே."

என்றபடி, உலகத்தவர்கள் செய்தபாவம் அரசனைச்சாரும்; அரசர்கள் செய்த தீமை அமைச்சரைச்சேரும், என்பதை யறியீர்களோ. அதாவது, உலகத்தார் செய்த பாவம் அரசனைச்சேரும் என்றதால் அவர்கள் பாவம் செய்யாதபடி தடுக்கவேண்டிய கடமை அரசனைச்சேர்ந்ததென்று தெரிகிறது. அப்படியிருக்க, தாங்களும் பாவம் செய்யத்துணிகிறீர்களே. தாங்களே இவ்விதம் செய்யத்துணிந்தால், தங்களுடைய பிரஜைகள் என்னதான் செய்யமாட்டார்கள்? அவர்கள் தாங்கள் செய்யப்பட்ட நியாயத்தைப் பற்றிக்கொண்டல்லவோ நடப்பார்கள். அப்பொழுது, மனிதர்களுக்கும் விலங்குகளுக்கு முண்டான வித்தியாசமே போய்விடும். நம்முடைய தேசமும் புலிகள் முதலான துஷ்ட ஜந்துக்கள் உள்ள காட்டுக்குச் சமமாகும். இதுவரையிலில்லாத புத்தி தங்களுக்கு இப்பொழுது எவ்வித மேற்பட்டதோ தெரியவில்லை! தங்களுக்கிது அழகல்ல. இந்த துர்ஆசையை விட்டுவிடுங்கள்.

மாயோன்:—மந்திரீ, இந்த ஸ்திரீ விஷயத்தில் தாங்கள் என்ன சொன்னபோதிலும் என் காதில் ஏறுது. அவளை இங்கு வரவழைக்கிறதற்குண்டான உபாயம் சீக்கிரம் சொல்லுங்கள்.

சுசீலன்:—ஏ, ராஜன்! அந்த ஸ்திரீயோ ஒரு புமானை அக்கினி சாக்ஷியாக விவாகஞ் செய்திருக்கிறாள். பதிவிரதா சிரோன்மணிகளுக்கு தங்களு

டைய பர்த்தாவே தெய்வமென்றும் மற்றொருவரையும் அவர்கள்மனத்தில் நினைக்கக் கூடாதென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தவிர, தாங்களும் அக்கினி சாக்ஷியாக ஒரு பெண்ணை விவாகஞ் செய்திருக்கிறீர்கள். இப்படியிருக்க, தாங்கள் அந்த ஸ்திரீயை அநியாயமாய் மனதில் நினைப்பது உசிதமல்ல, இதைவிட்டு விடுங்கள்.

மாயோன்:—தாங்கள் எவ்வளவுபுத்தி சொன்னபோதிலும் நான் அவற்றைக் கவனிக்கப் போகிறதில்லை. தயவுசெய்து அந்த ஸ்திரீயை எவ்விதத்திலாவது வரவழையுங்கள்.

சுசீலன்:—ராஜன், பெண்கள் நிமித்தமாக ராவணனுடைய குலமும், துரியோதனாதிகளுடைய வம்சமும் நிர்மூலமாய் விட்டதை மறந்தீர்களோ. ஸ்திரீசாபம் பொல்லாது. அவர்கள் சபித்துவிட்டால் புருஷர்கள் பஸ்மீகரமாய்ப் போய்விடுவார்கள். ஆகையால் இக்காரியத்தை விட்டுவிடுங்கள்.

மாயோன்:—மந்திரீ, தாங்கள் சொல்வதொன்றும் என்காதில் ஏறவேயில்லை. சீக்கிரத்தில் இதற்கு ஒரு தக்க ஏற்பாடு செய்யுங்கள். இல்லாமற்போனால் இந்த மந்திரி ஸ்தானத்தை விட்டுவிடுங்கள்.

சுசீலன்:—ராஜன், நான் தங்களுக்கு எவ்வளவு புத்திசொல்லியும் தாங்கள் கேட்கிறதாயில்லை. என்னையும் இந்த பாவத்தொழிலுக்கு உடன்படச் சொல்லுகிறீர்கள். ஆகையால், தாங்கள் சொல்லியபடி கெட்ட தொழில்களைச் செய்துகொண்டு இந்த உத்தியோகத்தை வைத்துக்கொள்ள என்மனமிசையவில்லை. ராஜன், இதோநான் போய்விட்டேன். போகிறபோது கடைசியாக ஒரு புத்தி சொல்லிவிட்டுப் போகிறேன். அதாவது, தங்களுடைய மனதிற்கொண்ட இத்தொழில் தங்களைப்போலுள்ள அரசர்களுக்குத் தகுந்ததல்ல; இத்தொழிலை விட்டுவிடுங்கள். இதினால் கெட்ட ஆபத்துக்கள் வந்து சேரும். நான் இன்று இவ்விடத்திற்கு வருமுன் தாங்கள் துற்சகுனங் கண்டேரென்றுரைத்தீர்கள். அவைதான் இவ்விதமான பாவத்தொழிலைச் செய்யச் சொல்லுகிறதென்று தோன்றுகிறது. இத்தொழிலை விடுங்கள். மனதிலும் நினையாதேயுங்கள், தங்களுடைய ஆக்ஞைப்பிரகாரம் இதோ போய்விட்டேன். (போகிறான்).

மாயோன்:—நான் நினைத்தகாரியம் சித்தியாகிறதற்கு ஒரு மார்க்கமுமில்லையே. சதாரத்தை நினைந்து நினைந்து என்னுயிர் என்னைவிட் டகலுமென்று தோன்றுகிறது. மந்திரியினால் ஒரு பிரயோசனமுமில்லை. நமக்கு சாஸ்திரங்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டான். அவன் வேலையை விட்டுப்போனது நன்றாய்விட்டது. நம்முடைய காரியத்திற்கு ஒரு ஆலோசனை செய்வோம். என் புத்தி மயங்கிவிட்டது; எனக்கொன்றும தோன்றவில்லை. இங்கே யாரடா இருக்கிறான்?

சேவகன்:—மகாராஜா, தங்கள் உத்திரவை யெதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

மாயோன்:—இந்த விஷயத்தில் நீயென்ன சொல்லுகிறாயடா? என்விஷயத்தில் ஒரு ஏற்பாடு செய்ய உன்னால் ஆகுமா?

சேவகன்:—(தனக்குள்) அரசனது எண்ணத்தை மாற்ற ஒருவராலும் முடியாதென்று தோன்றுகிறது. நம்மிடத்திலும் அபிப்பிராயம் கேட்டுவிட்டார். நாமும் நியாயம் சொல்வோமானால் என்னையும் வேலையைவிட்டுத் துறத்தி விடுவார். ஆகையால் ஆலோசித்து ஒரு உபாயம் சொல்லுகிறேன். (வெளிப்படையாக) மகாராஜா! இதற்கோர் உபாயமிருக்கிறது. தாங்கள் ஏராளமான திரவியம் செலவிடத் தயாராயிருக்கவேணும். அப்படிக் கிஷ்டமிருந்தால்தான் தாங்கள் நினைத்தகாரியம் சுலபமாய்க் கைக்கூடும்.

மாயோன்:—சேவகா, எவ்வளவு திரவிய வேண்டுமானாலும் அந்தவிஷயத்தில் செலவு செய்யத் தயாரா யிருக்கிறேன். உத்தேசம் எவ்வளவு வேண்டி வரும்?

சேவகன்:—இந்தக் காரியத்தை நிறைவேற்றுகிறது அதிக கடினமென்று தங்களுக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயம். இவளோ மகாபதிவிரதை யென்று தோன்றுகிறது. பதிவிரதைகளைக் கெடுக்க ஒருவரும் சம்மதிக்க மாட்டார். இவ்விதமிருக்க, தங்களுடைய எண்ணம் நிறைவேறவேணுமென்றால், தங்களுடைய ராஜ்ஜியத்தைக்கூடக் கவனிக்கக்கூடாது. அவ்விதம் கவனிக்கிறவிஷயத்தில் ஸ்திரீவிஷயமான இந்த எண்ணத்தை தாங்கள் கைக்கொள்ளவே கூடாது.

மாயோன்:—சேவகா, இவளை நினைத்ததுமுதல் என்னுயிர் என்னிடத்தி லில்லை. இவளை யழைத்து என்னை மணஞ்செய்துகொள்ள ஏற்பாடுசெய்கிற விஷயத்தில் நான் எதையும் இழக்கத் தயாரா யிருக்கிறேன்.

சேவகன்:—அப்படியானால் இந்த ஸ்திரீயைக் கொண்டுவரப் பட்டவர்களுக்குத் தங்களுடைய ராஜ்ஜியத்தில் பாதிகொடுப்பதாக விளம்பரஞ் செய்தால், பொருளி லாசையுள்ளவர்கள் வந்து உடனே தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றி விடுவார்கள். அவ்விதம் செய்யுங்கள்.

மாயோன்:—அவ்விதமே சம்மதித்தேன். எவ்விதத்திலும் அந்த ஸ்திரீ யெனக்குக் கிடைத்தாற் போதும். உன்னுடைய புத்திக்கு நான்மிக மனமகிழ்ந்தேன். இப்பேர்ப்பட்ட புத்தி நமது சுசிலனுக்கு இல்லாமற் போய்விட்டதே. இனிமேல் உன்னை யென்னுடைய சேவகனாக வைத்துக்கொள்ளுகிறது எனக்குச் சம்மதமே யில்லை. இக்காரியம் சரியானபடி நிறைவேறினால், உன்னை யென்னுடைய மந்திரியாக அமைத்துக் கொள்ளுவேன். சீக்கிரம் போய்த் தலையாரியை யழைத்து யாவரும் அறியும்படியாக இந்தப்படி விளம்பரஞ் செய்யச்சொல். தெரிந்ததா; சீக்கிரம்போ.

சேவகன்:—இந்த ஸ்திரீயை யழைத்து வரப்பட்டவருக்கு பாதி ராஜ்ஜியம் கிடைக்குமென்று விளம்பரஞ் செய்யலா மல்லவோ?

மாயோன்:—அவ்விதமே செய்யடா. சீக்கிரம் போய் விளம்பரஞ் செய்து, அதற்குடன் பட்டவர்கள் உடனே ராஜஸபைக்கு வரவேணுமென்றும் விளம்பரஞ் செய்யச் சொல்.

சேவகன்:—இதோபோய் விட்டேன். (போகிறான்)

மாயோன்:—(தனக்குள்) நான் இவ்விதமான கெட்ட காரியத்தில் இது வரையில் பிரவேசித்ததேயில்லை, இப்பொழுது இக்கைச்சவுக்கத்தைக் கண்ட வுடன் மயக்கங்கொண்டு அவளையெவ்விதத்திலாவது அடைய வேணுமென்றுஎண்ணங்கொண்டேன்; இக்கொடுந் தொழிலைச் செய்யவும் தயாராய்விட்டேன். நம்முடைய மந்திரி இதற்கிடையூறாகப் பல நியாயங்கள் சொன்னார். அதைப் பொறுக்க மாட்டாமல் அவரை மந்திரி ஸ்தானத்திலிருந்து தள்ளி விட்டேன். பிறகு இச்சேவகனது உபாயத்தைக் கைக்கொண்டு விளம்பரஞ் செய்யவும் சொன்னேன். தெய்வமே, என்னுடைய காரியம் கைகூடுமோ. தெரியவில்லையே. இந்தவிஷயத்தில் யான் சந்தேகப்படக் காரணமேயில்லையே. பாதி ராஜ்ஜியம் கொடுக்கச் சித்தமாயிருக்கிறபோது என் காரியம் ஏன் கைக்கூடாது ? என் ராஜ்ஜியம் போனாலும் போகட்டும்; சதாரம் என்னிடத்தில் வந்தால்போதும். மனமே, நீ வீணாய்ச் சஞ்சலப்படாதே; நீ நினைத்தகாரியம் க்ஷணப்பொழுதில் கைகூடிவிடும். உன்னை அரைநாழிகைக்குள் திருப்தி செய்கிறேன்; வீணாய்ச் சஞ்சலப்படாதே. (போகிறான்.)

☞ வி. கோபாலஐயங்கார், பி. ஏ.

தொட்டாற்சுருங்கி.

தொட்டாற்சுருங்கி என்பது மூலவர்க்கத்துள் சேர்ந்த ஒரு விசித்திரமான செடி. அதைக் கையினால் தொடுவதினாலே மாத்திரமல்ல; வேறுவகையாலும் அது சுருங்குவதுண்டு. இருந்தாற்போலிருந்து உண்டாகிற அதிக உஷ்ணம், அதிக சீதளம், முதலியவற்றாலும் அது சுருங்கும்; ஜந்துக்களுடைய நரம்புகளைத் தாக்குகின்ற நீராவி, கந்தகப்புகை முதலியவற்றின் பரிசத்தாலும் அது சுருங்கும். அச்செடி உஷ்ணமண்டலங்களெங்கும் உண்டென்றாலும், தென்னமெரிக்காவில் மிகுதி. அதை எவ்வளவு மிருதுவாகத் தொட்டாலும் அது சுருங்காதிராது. அதை நன்றாய்த் தொட்டுவிட்டால் அது அடியோடு ஒன்றாய் சுருங்கிக்கொள்ளும். அந்திப்பொழுதானதும் அதன் இலை கீழ்நோக்கிக் குவியும்; பின்பு அருணோதயகாலத்தில் அவ்வாறு குவிந்த இலை மீண்டும் விரியும். அதன் இலை வாடிப்பழுத்துப் போயிருக்கையில் அதற்குள்ள சுருங்குங் குணமட்டுங்கெடாது. மழை மிதமாய்ப் பெய்வதினால் அதற்குச் சிறிதும் குற்றமில்லை. ஆனால், அதிக மழைபெய்தாலும், அல்லது மழையோடு காற்றுங் கலந்தடித்தாலும், அது சிறிதும் பொறாமல் சுருங்கும். அது சுருங்குவதற்கும் விரிவதற்குமான காலஅளவு ஒரு வேளையிலிருந்தது போலிராது; காலத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி பத்து நிமிஷமுதல் இருபது நிமிஷமளவுமாகும். மழைக்காலத்தைவிடக் கோடைக்காலத்திலே தான் விரைவில் சுருங்கும். அதின் கிளையிலொன்றை அதினின்றும் வேறாகத் தறிப்பினும் அதின் இயற்கையாகிய சுருங்குங்குணமட்டும் நீங்காது. அதன் கிளையைவெட்டி, அவ்வாறு வெட்டினபக்கத்தைத் தண்ணீரில் முழுகும்படி வைத்திருந்தால் சிறிது நேரமளவும் அப்படியே

வாடாதிருக்கும். தண்ணீருக்குள் அந்தச்செடியை அழுத்திவைத்திருந்தால் அதன் இலை குவிந்து மீண்டும் விரியும். தண்ணீருக்குள் இருக்கையில் அதைத் தொட்டால் அது பூமியின் மீதிருப்பதுபோலவே சுருங்கும். ஆனால் சிறிது தாமதப்படும். இப்படிச் செய்வதினால் செடிக்கு யாதும் ஊறுபாடுண்டாகாது. அது யாதுகாரணத்தால் இவ்வாறு சுருங்குகின்றதென்பதை சாஸ்திரிகள் என்னபிரயத்தனஞ்செய்து பார்த்தும் அவர்கட்கு ஒன்றும் புலப்படவில்லை. அது மூலவர்க்கம், பிராணிவர்க்கம், இவ்விரண்டிற்கும் இடையாகிய ஓர் அற்புதமான சிருஷ்டியா யிருக்கவேண்டும்; அதனாலே தான் அது இவ்வாறு சுருங்குகின்றதெனச்சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜ. னி.

புஸ்தகவரவு: மகபதி.

இச்சிறந்த புஸ்தகம் ஷேக்ஸ்பியர் மஹாகவி ஆங்கில பாஷையில் எழுதிய 'மேக்பத்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு. இது ம-ா-ா-ஸ்ரீ ப. சம்பந்த முதலியார் பி. ஏ. பி. எல். அவர்களால் இயற்றப்பட்டது.

மகபதி சகேத நாட்டு மன்னனுக்கு பந்து. யுத்தத்தில் சாமர்த்தியம் பொருந்தியவன். ஆகையால் தனகராஜன் சேனைத்தலைவனாகை யிருந்தான். இவன் துர்க்குணமுள்ளவன். கொலைபாதகன், மகா துரோகி. பேராசையுள்ளவன். இவனைப்போல் இவன் மனைவியுமிருந்தாள். மூன்று மாயாவிகள் மகபதிக்குத் தோன்றி "நீ அரசனாவாய்" என்று சொல்லவே, பேராசைகொண்டு அரசனை தன்வீட்டிற்கு விருந்துண்ண வரவழைத்து தானும் தன் மனைவியும் சேர்ந்து அரசனை கொலைபுரிந்தனர். பின் அரசனானான். கொடுங்கோன் மன்னனென்று பேர் எடுத்தான். கொலையுண்ட அரசனின் புத்திரர்கள் வேறுதேசங்களுக்குச் சென்று சிலகாலஞ் சென்றபின் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு மகபதியுடன் யுத்தம் புரியவந்து கடும்போர் புரிந்து மகபதியைக்கொன்றார்கள். மால்கோமளன் சந்தோஷத்துடன் சேனைகளுடன் ஸ்காந்தபுரத்திற்கு ஏகி வைபவத்துடன் சிம்மாசனம் ஏறினான். இதில் சோகரசம் அதிகமிருந்த போதிலும் நாடகம் நூலாசிரியரால் வெகுதிறமையுடன் வரையப்பட்ட அலங்கார லக்ஷணங்கள் யாவும் படிப்பவர்களுக்கு இதைப் படிக்கவேண்டுமென்ற ஆசையையுண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர் லீலாவதி, சுலோசனை கள்வர்தலைவன், மனோஹரன்முதலியசிறந்தநாடகங்களை இயற்றியிருக்கின்றார். இவர் ஐகோர்ட்டு வக்கீல், மைலாப்பூர் தேவஸ்தானத்திற்கு தர்மகர்த்தா, சுகுணவிலாசசபையை ஸ்தாபித்து அதை விமரிசையாய் நடத்தி வருபவர். இவ்வளவு அலுவலிருந்தும் தமிழை விருத்திக்கு கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்துடன் அடிக்கடி சிறந்த ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்தும், அவைகளைப் போல் அமைத்தும் இயற்றிவருவது தமிழ் உலகத்தவர்க்கு பேருதவி என்போம். இவரைப் போல் மற்றவர்களும் பின்பற்றிவந்தால் மிகநலமே. இந்நாடகம் மிகவும் நல்ல நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதை யாவரும்வாங்கி படிப்பார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா-12. வேண்டுவோர் ரிப்பன் பிரஸுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.